விலை ரூபா: 20.00

# தமிழ்நாதம்

Thamil Naatham

இராகம் 01 | தாளம் 108

வள்ளுவர் ஆண்டு 2043 கார்த்திகை 01 வெள்ளிக்கிழமை (16.11.2012)

பக்கங்கள்: பதினாறு

டெங்கு ஒழிப்புப் பணியில்



அணி திரள்வோம்

# இறுதி யுத்தத்தில் எத்தனை பேர் கொல்லப்பட்டனர் என்பது எவருக்குமே தெரியாது

## சகலருமே குற்றவாளிகள் என்கிறார் ஐ.நா.அதிகாரி

(நியூயோர்க்)

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்ட மோதல் சம்பவத்தின் [illegible]து எத்தனை பேர் கொல்லப்பட்டனர் என்பது எவருக்கும் உறுதியான தகவல்கள் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. மேற்படி விடயங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் மீது மாத்திரமே முற்று முழுதான குற்றச்சாட்டுக்களை வைப்பதையும் ஏற்க முடியாது. ஆனாலும் இவ் விடயத்தில் சகல தரப்பினரும் குற்றம் இழைத்திருக்கின்றனர் என்பதை மட்டும் கூற முடியும் என்று ஐக்கிய நாடுகளின் மனித நேயப் பணிகளுக்கான முன்னாள் தலைவர் ஜோன் ஹோம்ஸ் தெரிவித்தார்.

02


## ஆஸியிலிருந்து 32 பேர் நாடு கடத்தல்

(சிட்னி)

சட்டவிரோதமாக படகுகள் மூலம் அவுஸ்ரேலியாவுக்கு சென்ற அகதிகளில் மேலும் 32 பேர் நேற்று நாடு கடத்தப்பட்டனர். இவர்கள் கிறிஸ்மஸ் தீவிலிருந்து, விமானம் மூலம் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக, அவுஸ்ரேலிய குடிவரவு அமைச்சர் கிறிஸ் போவன் தெரிவித்துள்ளார்.

விசா இல்லாமல் அவுஸ்ரேலியாவுக்குள் நுழைவோர், அங்கு தங்கியிருப்பதற்கு சட்ட ரீதியான உரிமையில்லை

02



யாழ்ப்பாணம் றில்கோ ஹொட்டலில் நேற்று நடைபெற்ற ஆளுநர் [illegible]நாட்டின் போது பிடிக்கப்பட்ட படம். நேற்றுமுன்தினம் ஆரம்பமான இந்த [illegible]நாடு இன்று முடிவடைகின்றது. மாநாட்டில் நாட்டில் உள்ள ஒன்பது மாகாணங்களின் ஆளுநர்களும் கலந்துகொண்டார்கள்.

## குற்றவியல் பிரேரணையை உடன் நிறுத்துக - ஐ.நா. வலியுறுத்தல்

(நியூயோர்க்)

இலங்கை அரசாங்கம் பிரதம நீதியரசருக்கு எதிராக கொண்டு வந்துள்ள குற்றவியல் பிரேரணையை இடைநிறுத்துமாறு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் நிபுணர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் தொடர்பான விசேட நிபுணர் கெப்ரியேல் க்னாவுல் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசாங்கம் நீதித்துறையை பாதுகாக்க முன்வரவேண்டும். இதற்காக உடனடியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

உடல் மற்றும் உளரீதியாக நீதித்துறையைச் சேர்ந்தவர்கள் மீது அரசாங்கம் மேற்கொள்கின்ற தாக்குதல்கள் உடனடியாக தவிர்க்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

பிரதம நீதியரசர் ஷிரானி

02

## 134 சடலங்கள் அடையாளம் காணப்படவில்லை

(கொழும்பு)

நாட்டில் நாள்தோறும் சுமார் 4 முதல் 5 வரையிலான இனம் தெரியாத சடலங்கள் மீட்கப்படுவதாக பொலிஸார் அறிவித்துள்ளனர். குளங்கள், வாவிகள், கடல் போன்ற பிரதேசங்களில் இவ்வாறான சடலங்கள் மீட்கப்படுகின்றன. ஆண்களின் சடலங்களே அதிகளவில் மீட்கப்படுவதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

02

## பிரான்சில் இரு தமிழரைக் கடத்திய நான்கு பாகிஸ்தானியர் சிறையில்

(பாரிஸ்)

பிரான்ஸின் பாரிஸ் தெற்கு நோக்கிச் சென்ற இரு தமிழர்களைக் கடத்திச் சென்றுள்ளதான குற்றச்சாட்டின் பேரில் நான்கு பாகிஸ்தான் பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களைக் கைது செய்த பொலிஸார் அவர்களை லியோன் சிறைச்சாலையில் அடைத்துள்ளனர்.

அவர்களுக்காகக் கடந்த செவ்வாய்க்கிழமை சட்டத்தரணிகள் விடுத்த பிணை மனுக்கள் நிரா-கரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 32 வயது, 25 வயது கொண்ட இரு தமிழர்களையே இந்தப்

02

## காணாமற்போன எக்னெலிகொட வழக்கு இன்ஸ்பெக்டருக்குப் பிடியாணை

(கொழும்பு)

கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவின் பொலிஸ் இன்ஸ்பெக்டரைக் கைது செய்யுமாறு ஹோமாகம நீதவான் நீதிமன்றம் இன்று பிடியாணை பிறப்பித்துள்ளது.

கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவின் பொலிஸ் இன்ஸ்பெக்டரான எம்.பி சுதேச விஜேயசிங்கவைக் கைது செய்யுமாறே ஹோமாகம நீதவான் நீதிமன்ற நீதிபதி வை.ஆர்.நெலும்தெனிய உத்தரவிட்டுள்ளார்.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமல் போனமை தொடர்பாக அவரது மனைவி சந்தியா எக்னெலிகொடவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவின் பொலிஸ்

02

## பயிலுநர் பட்டதாரிகளுக்கு பெப்ரவரியில் நிரந்தர நியமனம்

(கொழும்பு)

தற்போது பயிலுனர்களாக சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள பட்டதாரிகள் யாவரும் 2013ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23 திகதி அளவில் நிரந்த சேவையில் நியமிக்கப்படவுள்ளனர். இதற்குரிய நிதி ஒதுக்கீடுகள் இம்முறை வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக ஒதுக்கப்பட்டுள்ளதாக இலங்கை சுதந்திர பட்டதாரிகள் சங்கத்தின் தலைவரும் தொலைத் தொடர்புகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சருமான ரஞ்சித் சியாம்பலபிடிய தெரிவித்தார்.

மாவத்தகம தேர்தல்

02

## 41 செல்போன்கள், 18 கிராம் போதைவஸ்து 22 சிம் கார்ட்டுக்கள் சிறையில் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

கலவரத்தில் முடிந்த வெலிக்கடைச் சிறைச்சாலை தேடுதல் நடவடிக்கையின் போது 41 கைத்தொலைபேசிகளும், 18 கிராம் போதைப்பொருளும், 22 சிம் காட்டுகளும் கண்டுபிடிக்கப்பட்டதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்தார்.

சிறை வைக்கப்பட்டிருந்த கடும் குற்றவாளிகள் பலர் குற்றச்செயல்களை திட்டமிட்டு மேற்கொண்டனர். போதைவஸ்து கடத்தல்களிலும் ஈடுபட்டனரென்று அமைச்சர் கஜதீர நாடாளுமன்றத்தில் வெளியிட்ட அறிக்கையில்

02

## காவத்தையில் படையினர் சுற்றிவளைப்பு

(இரத்தினபுரி)

கஹவத்தை பிரதேசத்தில் பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் மற்றும் இராணுவத்தினரும் இணைந்து சுற்றிவளைத்துத் திடீர் தேடுதல் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர்.

கூரான ஆயுதத்துடன்

02

# அவுஸ்திரேலியாவில் இலங்கை தமிழ் அகதி தற்கொலை முயற்சி

அவுஸ்திரேலிய தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை தமிழர் ஒருவர் தற்கொலைக்கு முயற்சித்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று அதி காலை சிட்னியில் இடம்பெற்றுள்ளது.

குறித்த நபர் இலங்கையில் இருந்து படகு மூலம் அவுஸ்திரேலியாவுக்கு சென்றுள்ள நிலையில், அந்த நாட்டுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் என்று தெரிவித்தே தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இந்தநிலையில் நேற்றுக் காலை அவர், தற்கொலைக்கு முயற்சித்தமையை அவதானித்த ஆப்கானிஸ்தானிய அகதி ஒருவர் அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளார்.

இதனையடுத்து குறித்த அகதியை அவுஸ்திரேலிய அதிகாரிகள் காப்பாற்றியுள்ளனர்.

இவர், இரண்டு மாதங்களுக்கு முன்னர், மாரிபிர்நொங் தடுப்பு முகாமில் இருந்து சிட்னிக்கு மாற்றப்பட்டார்.

இதேவேளை கடந்த இரண்டு கிழமைகளுக்கு முன்னரும் நாடு கடத்தப்படவிருந்த இலங்கைத் தமிழர் ஒருவர் தற்கொலைக்கு முயன்றமை குறிப்பிடத்தக்கது.

# பொலநறுவையில் சிவப்பு மழை பதற்றத்தில் சிங்கள மக்கள்

பொலன்நறுவை மாவட்டத்தில் மன்னம்பிட்டிய பிரதேசத்தில் நேற்று காலை 8:00 மணியளவில் சிவப்பு மழை பெய்துள்ளதாக அப்பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். இச்சிவப்பு மழை தொடர்ந்து ஒரு மணிநேரத்திற்கு பெய்துள்ளது.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் மொனராகல மாவட்டத்தில் செவனகல பிரதேசத்தில், இந்தி கொலபெலஸ்ஸ பகுதியிலும் சிவப்பு மழை பெய்ததாக அக்கிராமத்து மக்கள் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினமும் நேற்றும் இவ்வாறு சிவப்பு மழை பெய்ததால் குறிப்பிட்ட கிராமத்து மக்கள் பீதியடைந் கிராமத்திற்கு ஏதாவது அழிவு ஏற்படுமா என அச்சமடைந்துள்ளனர்.

சில வருடங்களுக்கு முன் இந்தியா கேரளாப் பகுதியிலும் இவ்வாறு சிவப்பு மழை பெய்ததாக அறியமுடிகின்றது.

# பஸ்களுக்கு வர்ணக் குறியாக்கம்

பொதுப் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் பஸ்களை இனங்காணும் வகையில் வெவ்வேறு நிறப்பூச்சுகளைப் பூசுவதற்கு அமைச்சரவை அங் கீகாரமளித்துள்ளது.

போக்குவரத்து அமைச்சர் குமார் வெல்கம கையளித்த அமைச்சரவைப் பத்திரத்துக்கு அனு மதி கிடைத்துள்ளது. இலகுவாக இனங்காணும் வகையிலேயே இந்த நிறங்கள் பயன்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய, இலங்கை போக்குவரத்துச் சபைக் குச் சொந்தமான பஸ்கள் சிவப்பு நிறத்திலும், தனி யார் பஸ்கள் நீல நிறத்திலும் பாடசாலை பஸ்கள் மஞ்சள் நிறத்திலும் வெவ்வேறு நிறங்களால் வகைப்படுத்தப்படவுள்ளன.

இலங்கையில் பதிவு செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை 45 இலட்சம் ஆகும். இ.போ.ச மற்றும் தனியார் பஸ்களின் எண்ணிக்கை 20ஆயிரம் ஆகும்.

# ஜனாதிபதி சட்டத்தரணிகளாக 22 பேர் சத்தியப்பிரமாணம்



தமிழர் ஒருவர் உட்பட 22 வழக்குரைஞர்கள் ஜனாதிபதி சட்டத்தரணிகளாகப் பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க, உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேல் முறையீட்டு நீதிபதிகள், மேல் நீதிமன்ற நீதிபதிகள் முன்னிலையில் நேற்று சத்தியப்பிரமாணம் செய்துகொண்டுள்ளனர்.

ஜனாதிபதி சட்டத்தரணிகள் ஒரு தடவையில் கூடுதலாக நியமிக்கப்பட்டமை இதுவே முதல் தடவையாகும் என்பதனால் இது இலங்கையின் நீதித்துறை வரலாற்றில் தனிச்சிறப்பு வாய்ந்த நிகழ் வாக அமைகின்றது.

இந்த 22 புதிய சட்டத்தரணிகளுக்கு மேலாக மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் ஜயந்த ஜயசூரிய இந்த வருடம் மார்ச் மாதத்திலும் இந்திர சேனரத்ன சமரசிங்க மற்றும் சட்டக்கல்லூரி அதிபர் டபிள்யூ.டி. றொட்றிகோ ஆகியோர் செப்டெம்பரிலும் ஜனாதிபதி சட்டத்தரணிகளாக பதவியேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

வழக்குரைஞர் முருகேசு சிற்றம்பலம் உட்பட 22 சட்டவுரைஞர்களே ஜனாதிபதி சட்டவுரைஞர்களாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டுள்ளனர்.

## பிரான்சில் இரு...(தொடர்)

பாகிஸ்தானியர் கடத்தியுள்ளனர்.

ஆட்கடத்தல், கொலை, கொள்ளை, மற்றும் ஆயுதப் பயன்பாடுகள் போன்ற குற்றச்சாட்டுக்கள் மேற்படி நான்கு பாகிஸ்தானியர்கள் மீதும் சுமத்தப்பட்டுள்ளது. எனினும் ஏன் இத்தமிழர்களைக் கடத்தினர் என்பது குறித்து காவல்துறையினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## காணாமற்போன...(தொடர்)

இன்ஸ்பெக்டர் எம்.பி சுதேச விஜேயசிங்க பிரதான சாட்சியாளராவார்.

இது தொடர்பிலான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது அவர் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை அதனையடுத்தே மேற்படி வழக்கை டிசெம்பர் மாதம் 05 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்த நீதவான் அவரை கைது செய்யுமாறு பிடியாணை பிறப்பித்தார்.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் காணாமல் போனமை குறிப்பிடத்தக்கது.

## காவத்தையில்..(தொடர்)

நபரொருவர் அப்பகுதியில் நடமாடுவதாக பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணொருவர், பொலிஸாரிடம் செய்த முறைப்பாட்டை அடுத்தே இந்தத் திடீர் சுற்றிவளைப்புத் தேடுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நடவடிக்கையில் இரு நூறுக்கும் மேற்பட்ட இராணுவத்தினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றன.

# நல்லூரில் வீதித்தடை

எதிர்வரும் 19ஆம் திகதி திங்கட்கிழமை நல்லூர் கோவிலில் இடம்பெறும் சூரசம்கார நிகழ்வை முன்னிட்டு ஆலயச் சூழலினூடான வாகனப் போக்குவரத்து அன்றைய தினம் பி.ப. 20.00 மணி முதல் 7.00 மணி வரையும் தடை செய்யப்படவுள்ளது. வாகன உரிமையாளர் மாற்று வழிகளைப் பயன்படுத்துவதன் மூலம் ஆலயச் சூழலில் அமைதியைப் பேணுவதற்கு ஒத்துழைப்பு நல்குமாறு யாழ் மாநகர-சபை முதல்வர் திரு.யோ. பற்குணராசா கோரிக்கை விடுத்துள்ளார்.

## பயிலுநர் பட்டதாரிகளுக்கு...(தொடர்)

தொகுதியின் சுதந்திர பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் மாவத்தகம சாமோதய கேட்போர் கூடத்தில் பயிலுனர் பட்டதாரிகளாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட 950 பட்டதாரிகள் மத்தியில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போது அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

சுமார் 51400 பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளன. இது சாதாரண விடயமல்ல.

குருநாகல் மாவட்டத்தில் 6000 பட்டதாரி களுக்கு இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இலங்கையிலேயே கூடுதலான பட்டதாரிகள் இந்த மாவட்டத்தில இருந்தே சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர் என்றும் கூறினார்.

## 41 செல்போன்கள்...(தொடர்)

குறிப்பிட்டுள்ளார்.இவர்கள் சிறையிலிருந்தவாறே வெளிநாடுகளிலுள்ளவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தினரெனவும் அவர் தெரிவித்தார்.

ஜனநாய தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுர குமார திசாநாயக்காவின் கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம்தான் விசேட அதிரடி படையினரின் உதவியை கோரியதாக கூறினார்.

இது சிறைச்சாலை சட்டத்தின் பிரிவு 77ஆம் சரத்தின் படி சட்ட ரீதியானதாகும் என அவர் குறிப்பிட்டார்.

வெலிக்கடை சிறைச்சாலை கலவரத்தை ஆராய நியமிக்கப்பட்டுள்ள மூன்று பேர் கொண்ட குழு, இதன் பின்னணியில் இருந்தவர்களை கண்டுபிடிக்கும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த மூவர் குழுவில் தமக்கு நம்பிக்கை இல்லை என்று தெரிவித்த எதிர்க்கட்சியின் பிரதான கொ-றடாவான ஜோன் அமரதுங்க, இதற்கென ஒரு நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்பட வேண்டும் என்றார்.

## ஆஸியிலிருந்து 32 பேர்...(தொடர்)

என்றும், அந்த வகையிலேயே இவர்கள் திருப்பி அனுப்பப்பட்டதாகவும் ஏனையவர்கள் கூடிய விரைவில் திருப்பி அனுப்பப்படுவர் எனவும் தெரிவித்துள்ளார். இதுவரையில் அவுஸ்திரேலியாவிலிருந்து 324 அகதிகள் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டுள்னர்.

## குற்றவியல் பிரேரணையை...(தொடர்)

பண்டாரநாயக்கவுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் கொண்டுவந்துள்ள குற்றவியல் பிரேரணை தொடர்பில் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

நீதித்துறையில் இருந்து உயர் நீதியரசர் நீக்கப்படுவதே, நீதித்துறை மீது அரசாங்கம் மேற்கொள்கின்ற அதிகப்பட்ச வன்முறையாக அமையும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## இறுதி யுத்தத்தில் எத்தனை...(தொடர்)

"வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்ட யுத்தத்தின்போது எத்தகைய விலையை கொடுத்தேனும் புலிகளை ஒழித்துக் கட்டுவது என்ற முடிவில் இலங்கை அரசு திடமாக இருந்தது. அது மாத்திரமின்றி இத்திட்டத்தினை எவரும் தடுத்து விடக் கூடாது என்பதிலும் மிகக் கவனமாக இலங்கை அரசு செயற்பட்டது" என்று ஐக்கிய நாடுகளின் மனித நேயப் பணிகளுக்கான முன்னாள் தலைவர் ஜோன் ஹோம்ஸ் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் உள்ளக விசாரணை அறிக்கையின் உள்ளடக்கங்கள் கசிந்துள்ள நிலையிலேயே ஜோன் ஹோம்ஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியுள்ளதாவது,

வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்ட யுத்தத்தின் போதான விடயங்களை பகிரங்கப்படுத்தியிருந்தாலோ அல்லது அங்கு கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையை தெரிவித்திருந்தாலோ மோதல்களை நிறுத்தியிருக்க முடியும் என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. எனினும் இதனை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. அவ்வாறு செய்திருந்தாலும் கூட எந்தவித மாற்றத்தினையும் செய்திருக்க முடியாது.

இந்நிலையில் ஐக்கிய நாடுகள் சபையினால் மாத்திரமின்றி தேறு எந்த சக்தியாலும் நடவடிக்கை எடுக்க முடியாத நிலைமை காணப்பட்டது. அத்துடன் இது ஒரு கடினமான விடயம் என்பதால் உலகின் எந்தவொரு சக்தியும் இதனைத் தடுப்பதற்கு முன்வரவில்லை.

ஆகையால் இலங்கையின் இறுதிக் கட்ட யுத்த நிலைமைக்கு ஐ.நா.வே முழுப் பொறுப்பு என்று கூறுவதை ஏற்க முடியாது. அந்த சந்தர்ப்பத்தில் மிகவும் சங்கடமான ஒரு நிலை மைக்கு முகம் கொடுக்க தேண்டிய நிலைமையும் ஏற்பட்டிருந்தது.

அத்தருணத்தில் எடுக்கக்கூடிய முடிவுகள் எம்மால் எடுக்கப்பட்டன. அந்த முடிவுகள் தொடர்பில் விமர்சனங்களை முன்வைக்க முடியும். இல்லாவிட்டால் ஏற்றுக் கொள்ளவும் முடியும். ஆனாலும் நாம் தேறுவிதமாக செயற்பட்டிருந்தால் இலங்கை அரசும் மாற்று நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கும் என்று அறிக்கை கூறுவதையும் எம்மால் ஏற்க முடியாது எனத் தெரிவித்துள்ளார்.

## 134 சடலங்கள்...(தொடர்)

சில காலங்கள் கடந்ததன் பின்னர் உறவினர்களினால் சில சடலங்கள் அடையாளம் காணப்படுகின்றன.

எனினும் பல சடலங்கள் அடையாளம் காணப்படுவதில்லை. இதனால் அடையாளம் காணப்படாத சடலங்கள் அரசாங்க செலவில் அடக்கம் செய்யப்படுகின்றது. கடந்த வருடம் 134 அடையாளம் காணப்படாத சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இதில் 112 சடலங்கள் ஆண்களுடையது எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# இலங்கையில் விட்ட தவறுகளை ஐ.நா. இனியும் விட கூடாது

## சனல்-4 செய்தியாளர் கொலம் மக்ரே

ஐக்கிய நாடுகள் சபை இலங்கையில் விட்ட தவறுகளை எதிர்வரும் காலங்களில் மீண்டும் விடக் கூடாது என்ற உறுதி வழங்கப்பட வேண்டும் என்று சனல் 4 செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் கொலைக்களம் திரைப்படத்தை இயக்கிய சனல் 4 செய்தியாளர் கொலம் மெக்ரே இதனைத் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை அரசாங்கம் ஆரம்பிக்கும் போது, இந்த செயற்பாடுகளுக்கு சாட்சியங்களை இல்லாது செய்யும் பணிகளையும் அரசாங்கம் நடத்தியது. அதன் அடிப்படையில் வடக்கில் இருந்து ஊடகங்கள் வெளியேற்றப்பட்டன.

சர்வதேச ஊடகங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டன. அத்துடன் இந்தப் பகுதியில் இருந்து சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களும் அகற்றப்பட்டது.

அதன் அடிப்படையிலேயே ஐக்கிய நாடுகள் சபையும் அங்கிருந்து விலகிக் கொண்டது. இது அரசாங்கம் பொது மக்களுக்கு எதிரான இரத்தக் களரிக்கு துணைபோகும் வகையிலான செயற்பாடாக அமைந்திருந்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் நடைபெறாதிருக்கவும், ஐக்கிய நாடுகள் மீதான நம்பிக்கை பேணப்படவும், ஐக்கிய நாடுகள் சபை அதற்கு ஈடான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளராக மொஹான் சரமநாயக்க நியமனம்

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைவர் மொஹான் சமரநாயக்க, ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைவராகவும் பதவிவகிக்கும் அதேவேளை, ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளராகவும் மொஹான் சமரநாயக்கா கடமையாற்றுவார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், ஜனாதிபதியின் சர்வதேச ஊடகப் பிரிவின் பணிப்பாளராக அனுராதா ஹேரத் நியமனம் பெற்றுள்ளார்.



இதேவேளை, ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளராக இதுவரை காலமும் கடமையாற்றிய பந்துல ஜயசேகர, அவுஸ்திரேலியாவின் சிட்னி நகர கொன்ஸியூலர் ஜெனரலாக நியமனம் பெற்று நேற்று முன்தினம் அவுஸ்திரேலியாவுக்குப் பயணமாகினார்.

# ஐ.நா.அறிக்கை கிடைத்ததும் இந்தியா நடவடிக்கை எடுக்கும்

இலங்கை இறுதி யுத்தத்தின்போது மக்களைப் பாதுகாக்க ஐ.நா. தவறியமை தொடர்பான உள்ளக அறிக்கை முழுமையாகக் கிடைக்கவில்லை என்று [illegible]திய அமைச்சர் இ.அகமது தெரிவித்தார்.

சென்னை விமான நிலையத்தில் நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர்களைச் சந்தித்த மத்திய வெளியுறவுத் துறை இணை அமைச்சர் இ.அகமது இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் சரியான நேரத்தில் இந்தியா குரல் கொடுத்துள்ளது. ஐ.நாவி.ன் அறிக்கை முழுமையாகக் கிடைத்த பிறகு அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து முடிவு செய்யப்படும் என்று கூறினார்.


# தெங்கு அபிவிருத்தியில் அமெரிக்கா அவதானம்

இலங்கையின் தென்பகுதி அபிவிருத்தி தொடர்பில் அமெரிக்கா அவதானம் செலுத்த ஆரம்பித்துள்ளது.


இதனடிப்படையில் அமெரிக்காவின் இலங்கைக்கான தூதுவர் மிச்சேல் ஜே சிசன் நேற்று முன்தினம் தென்மாகாணத்தின் பல பகுதிகளுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். காலி டச்சுக் கோட்டை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு அவர் சென்றிருந்தார்.


இதன்போது அவர் தென் மாகாணத்தின் கல்வி, கலாசார மற்றும் பொருளாதார அபிவிருத்திகள் தொடர்பில் ஆராய்ந்திருப்பதாக அமெரிக்கத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தென் மாகாணத்தின் கல்வி அபிவிருத்திக்காக, அமெரிக்க தூதகரம் 10 மில்லியன் டொலர்களை நிதியாக வழங்குமென உறுதியளித்துள்ளார்.



இதற்கிடையில் பல்வேறு புலமைப் பரிசில் திட்டங்களையும் வழங்க இணக்கம் தெரிவித்துள்ளாரென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.





யாழ்ப்பாணம் கொழும்புக்கான புகையிரதப்பாதை அமைக்கும் பணிகள் யாழ் குடாநாட்டில் ஆரம்பமாகியுள்ளன. இந்த திட்டம் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டு சுமார் பத்துமாத இடைவெளியின் பின்னா செயல்பாட்டிற்கு வந்துள்ளது.

தற்போது கோண்டாவில் புகையிரத நிலையத்திற்கு முன்னால் தண்டவாளங்கள் கொண்டுவரப்பட்டு பொருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதில் அதிக எண்ணிக்கையான இயந்திர சாதனங்கள் பயன்படுத்தப்பட்டு இந்தப் பணி மேற்கொள்ளப்படுகின்றது.

(படங்கள் : வலிகாம நிருபர்)

# தெரிவுக்குழு முன் பிரதம நீதியரசர் ஆஜராவார்



பிரதம நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்க எதிர்வரும் 23 ஆம் திகதி நாடாளுமன்றத் தெரிவுக் குழு முன்னிலையில் ஆஜராகவுள்ளார்.

குற்றப் பிரேரணை தொடர்பிலான விசாரணைகளுக்காக பிரதம நீதியரசர் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் முன்னிலையில் ஆஜராகவுள்ளார்.

குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் 22ஆம் திகதிக்கு முன்னதாக ஷிரானி பண்டாரநாயக்க விளக்கமளிக்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ்.நகரில் இஸ்லாமிய புத்தாண்டுப் போட்டிகள்

ஹிஜ்ரி 1434 முஹர்ரம் இஸ்லாமிய புத்தாண்டுப் போட்டிகள் இவ்வருடம் யாழ்ப்பாணத்தில் மிகவும் சிறப்பாக நடைபெறவிருக்கின்றன. யாழ்.பிளவ்ஸ் ஹாஜியார் பவுண்டேஷன் சார்பில் யாழ்.மாவட்ட அஹதியா சன்மார்க்க போதனாபீடம், பாடசாலை, மத்ரஸா மாணவர்களுக்கான கிறாஅத், கிப்ழ், பேச்சு, கவிதை, கஸீதா, இஸ்லாமிய கீதம், ஹதீஸ் மனனம், அதான், பொதுஅறிவுப் போட்டிகளை எதிர்வரும் 08.12.2012 இல் யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரி பிதான மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது.

கவிதை, கட்டுரைப் போட்டிகள் வயது வித்தியாசமின்றி எவரும் பங்குபற்றலாம். கட்டுரைகள் 2500 சொற்களுக்கு மேல் கீழ்க்காணும் தலைப்பில் இருக்க வேண்டும். (அ) இஸ்லாமிய வரலாற்றில் ஹிஜ்ரத் ஒரு திருப்பு முனை, (ஆ) யாழ். முஸ்லிம் கொடை வள்ளல்களால் வக்பு செய்யப்பட்ட தர்ம சொத்துக்களை பாதுகாப்பதற்கான வழிமுறை. கவிதைகள் 500 சொற்களுக்கு மேலாக கீழ்காணும் தலைப்பில், (அ) துன்பத்தில் ஓர் முஸ்லிம் பெறும்படிப்பினை, (அ) யாழ்ப்பாணத்தில் பிறந்து வாழ்ந்து மறைந்த முஸ்லிம் சமூக சேவையாளர் ஒருவரின் போற்றத் தக்க சேவை. கவிதை, கட்டுரைகளை 06.12.2012 இற்கு முன்னர் கீழ்காணும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும். தலைவர், யாழ்.மாவட்ட அஹதியா சன்மார்க்க போதனா பீடம், 165, கலீபா அப்துல்காதர் வீதி, நாவலர் வீதி, முஸ்லிம் வட்டாரம், யாழ்ப்பாணம். பரிசளிப்பு விழா 09.12.212 இல் யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியில் இடம்பெறும்.

## இன்றைய இராசி பலன் (16.11.2012)

நந்தன வருடம் கார்த்திகைத் திங்கள் முதலாம்
நாள் வெள்ளிக்கிழமை

**நட்சத்திரம்** : கேட்டை மு.ப. 10.11 வரை அதன் பின் மூலம்
**திதி** : திருதியை முன்னிரவு 9.33 வரை. அதன் பின் சதுர்த்தி
**சுபநேரம்** : 6.08 - 7.38 **இராகுகாலம்** : 10.38 -12.08
(இந்த நேரங்கள் இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்)

**மேடம்** : மனப்பயம், பணச்செலவு, பிரயாணக் கஷ்டம்
**இடபம்** : தேகஆரோக்கியம், மனமகிழ்ச்சி, விருந்துபசாரம்
**மிதுனம்** : இல்லச் சிறப்பு, சகோதர உதவி, மகிழ்ச்சி
**கடகம்** : உடல்நலம் பாதிப்பு, அதிகயோசனை, தூரச் செய்தி
**சிங்கம்** : பணப்பிரச்சினை, ஏமாற்றம், வாக்குவிரோதம்
**கன்னி** : எதிர்பாராத வரவு, தேக சுகம், தெய்வ அனுகூலம்
**துலாம்** : இடமாற்றம், பொருள் நஷ்டம், வாக்குவாதம்
**விருச்சிகம்** : பணவரவு, தேகஆரோக்கியம், சுபகாரியச் செலவு
**தனுசு** : காரியத் தடை, அமைதியின்மை, வழக்கு விவகாரம்
**மகரம்** : தொழில் விருத்தி, இலாபம், பிறருக்கு உதவி
**கும்பம்** : முற்கோபம், அதிகாரப் போக்கு, மனநிலை மாற்றம்
**மீனம்** : மனப்பயம், வீண்செலவு, தேகநலம் பாதிப்பு

- ஜோதிடர் பால.இரத்தினசேகர்

# காமன்வெல்த் மாநாட்டைப் புறக்கணிக்கவும்

## - பிரி.பிரதமருக்கு அழுத்தம்



இலங்கையில் 2013ஆம் ஆண்டு நடைபெறவுள்ள பொது நலவாய உச்சி மாநாட்டை புறக்கணிக்குமாறு பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரோனிடம் அந்த நாட்டின் நாடாளுமன்ற வெளிவிவகாரக்குழு கோரியுள்ளது.

இது தொடர்பில் அந்தக் குழு வெளியிட்டு அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2013ஆம் ஆண்டுக்கான பொது நலவாய உச்சி மாநாட்டை இலங்கையில் நடத்துவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம் தவறானது.

மனித உரிமைகளை பாதுகாப்பதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் மற்றும் அரசியல் உரிமைகளை பாதுகாத்து உறுதிப்படுத்தும்வரை அங்கு நடைபெறவிருக் கின்ற பொதுநலவாய உச்சி மாநாட்டில் பங்கேற்பதை பிரித்தானிய பிரதமர் புறக்க ணிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முஸ்லிம் சமய கலாசார திணைக்கள பணிப்பாளராக நவவி மீண்டும் நியமனம்

முஸ்லிம் சமய கலாசார திணைக்கள பணிப்பாளராக அல் ஷெய்க் வை.எ ல்.எம். நவவி (நளீமி) மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக முஸ்லிம் சமய கலாசார திணைக்கள பணிப்பாளராக கடமையாற்றிய இவர் கடந்த நவம்பர் 8ஆம் திகதி வியாழக்கிழமை முதல் புத்தசாசன மற்றும் சமய விவகார அமைச்சிற்கு திடீரென இடமாற்றப்பட்டிருந்தார்.

ஹஜ் விவகாரங்களுக்கான சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசியின் தலையீட்டை அடுத்து நவவியின் இடமாற்றம் ரத்து செய்யப்பட்டுள்ளது.

இதனைய டுத்து, சிரேஷ்ட அமைச்சர் பௌசி தலைமையில் இன்று புதன்கிழமை மாலை 2013 ஆம் ஆண்டுக்கான ஹஜ் தொடர்பில் ஆராயும் கூட்டத்தில் பணிப்பாளர் நவவியும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# 'லயன் எயர்' விமானப் பாகங்கள் மீட்கும் பணி மீண்டும் ஆரம்பம்

1998ஆம் ஆண்டு புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டதென நம்பப்படும் "லயன் எயார்" பயணிகள் விமானத்தின் உடைந்த பாகங்களை மீட்கும் பணியினை கடற்படையினர் ஆரம்பித்துள்ளனர்.

மன்னார் கடலில் இரணைத்தீவுக்கு அப்பால் காணப்படும் இந்த விமானத்தின் பாகங்களை மீட்கும் நடவடிக்கையைப் பார்வையிட நேற்று முன்தினம் நீதவான் சென்றிருந்தார்.

நீண்ட காலமாகக் காணாமல் போனோர் என வகைப்படுத்தப்பட்டிருந்த பயணிகளுக்கு என்ன நடந்தது எனத் தீர்மானிக்கவே நீதவான் சம்பவ இடத்துக்குச் சென்றிருந்தார். குறித்த விமானம் விழுந்திருந்த இடத்தை கடற்படையினர் கடந்த மாதம் கண்டு பிடித்திருந்தனர்.

சிவசுப்பிரமணியம் தில்லைராஜ் என்பவரிடம் பயங்கரவாத விசாரணை திணைக்கள அதிகாரிகள் நடத்திய விசாரணையின்போது, 14 வருடங்களுக்கு முன் காணாமல் போன விமானத்தை புலிகள் சுட்டு வீழ்த்தினர் எனும் தகவல் தனக்குக் கிடைத்ததாகச் சொன்னார்.

ரஷ்ய அன்ரனொவ் 24 ரகத்தைச் சேர்ந்த இந்த விமானம், கடந்த 1998ஆம் ஆண்டு செப்டெம்பர் 29ஆம் திகதி, பலாலி விமான நிலையத்திலிருந்து 48 பயணிகள், 6 உக்ரேனிய விமானிகள் சகிதம் இரத்மலானை நோக்கிப் புறப்பட்டது.

விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில் அது ரேடாரிலிருந்து மறைந்து போயிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மகளுக்கு மது பருக்கிய பெற்றோர் கைது

தாங்களும் மதுவை அருந்தி விட்டு போதை தலைக்கேறிய பின்னர் தங்களுடைய ஒரேயொரு மகளுக்கும் மதுவை பருக்கிய பெற்றோர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர் இச் சம்பவம் களுத்துறையில் இடம்பெற்றுள்ளது.

வைத்தியசாலையில் பணியாற்றுகின்ற குறித்த சிறுமியின் தந்தை தனது மனைவியுடன் இணைந்து மது அருந்தியுள்ளார்.

இளம் தம்பதியினரான அவ்விருவரும் மது அருந்திவிட்டு போதை தலைக்கேறியதை தொடர்ந்து தங்களுடைய ஒரேயொரு மகளான ஒன்பது வயதுச் சிறுமிகளுக்கும் மதுவைப் பலவந்தமாகப் பருக்கியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மத்துகம பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து குறித்த பெற்றோரை கைது செய்த பொலிஸார் அவ்விருவரையும் மத்துகம நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தினர்.

பெற்றோரை விளக்கமறியளில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான் தமிந்த ராமநாயக்க வெலிகொடபிட்டிய ஒன்பது வயதுச் சிறுமியை சிறுவர் இல்லத்தில் ஒப்படைக்குமாறு பணித்தார்.

# குற்றவாளிகளுக்கு வேறு தண்டனை வழங்கி சிறையின் இடநெருக்கடியைக் குறைக்க முயற்சி

சந்தேகநபர்களை விளக்கமறியலில் வைப்பதைத் தவிர அவர்களுக்கு வேறு தண்டனைகளை வழங்குவது தொடர்பில் அரசாங்கம் ஆராயவுள்ளது.

சிறைச்சாலைகளில் நிலவும் நெருக்கடியை குறைக்கும் ஒரு நடவடிக்கையாகவே வேறு தண்டனைகள் குறித்து ஆராயவிருப்பதாக முன்னாள் சட்டமா அதிபரும் அமைச்சரவையின் சட்ட ஆலோசகருமான மொஹான் பீரிஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தடுத்து வைத்தல் அல்லாத வினைத்திறன் மிக்க பல்வகையான தண்டனைகள் இருக்கின்றன அவ்வாறானவற்றுக்கு முன்னுரிமை கொடுத்து ஆராயவிருக்கின்றோம்.ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவும் இந்த விடயத்தில் கவனம் செலுத்திவருகின்றார்.

விளக்கமறியல் அல்லாத தண்டனை என்பது மறியல் அல்லாமல் வேறு எங்காவது அனுபவிக்க வேண்டிய குற்றவியல் தண்டனையாகும் நன்னடத்தை என்பதும் இந்த வகையை சார்ந்ததாகும் என்றார்.

இதேவேளை இலங்கை மனித உரிமை ஆணைக்குழு வெலிக்கடை சிறைச்சாலை கலகம் பற்றி விசாரிக்க போவதாக கூறியுள்ளது.

அதுமட்டுமன்றி கையடக்கத் தொலைபேசிகளை அகற்றுவதற்கு விசேட அதிரடிப்படையை அனுப்ப வேண்டுமா? தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குவின் தலைவர் யார்? ஆக்குழுவின் தலைவர் ஜனாதிபதியாவார் அவரினால் கையடக்க தொலைபேசிகளை இலவாக செயலிழக்க செய்திருக்க முடியும் என ஜே.வி.பியின் தலைவர் சோம வங்ச அமரசிங்க கேள்வியெழுப் பியுள்ளார்.

சிறையுடைப்பை நிறுத்துவதற்கு வன்முறையில்லாத முறைகளை பற்றி அரசாங்கம் சிந்திக்கவே இல்லை. சிறையிலிருந்து தப்பியோடியவர்களை நீங்கள் கொல்ல முடியாது.

அவர்களுக்கான தண்டனையை கூட்டியிருக்கலாம் ஆனால் நீங்கள் அவர்களின் உயிரை எடுக்க முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நிலையிலேயே முன்னாள் சட்டமா அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

# வாகனங்களின் விலை அதிகரிப்பு

2013ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தில் சுங்கத்தீர்வை அதிகரிக்கப்பட்டதால், சகல வகையான வாகனங்களின் விலை களும் அதிகரிக்கப்பட்டுள்ளன எனறு வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் சரத்சந்திர தெரிவித்தார்.

இதன் பிரகாரம் வாகனங்களின் விலை 2 இலட்சம் ரூபாவிலிருந்து 5 இலட்சம் ரூபாவுக்கு இடையில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

சிறியரகக் காரான மாருதி யின் விலை 2 இலட்சம் ரூபாவினாலும் டொயோட்டா விட்ஸ்ன் விலை 2 இலட்சம் ரூபாவிலிருந்து இரண்டரை இலட்சம் ரூபா வரை அதிகரித்துள்ளது.

இதே வேளை, வான் மற்றும் லொறி ஆகியவற்றின் விலை 4 இலட்சம் ரூபாவினாலும் 5 தொன் எடையுடைய வாகனங்களின் விலைகள் 4 இலட்சம் ரூபா முதல் 5 இலட்சம் ரூபாவினாலும் அதிகரித்துள்ளன.

# சுயாதீனமாகச் செயற்படுகிறாராம் அஜித் எம்.பி.

ஜனநாயக தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் குமார தான் நாடாளுமன்றத்தில் சுயாதீன உறுப்பினராக செயற்படவுள்ளதாக நாடாளுமன்றத்தில் நேற்று அறிவித்தார்.

நாடாளுமன்றத்தில் விசேட கூற்றை விடுத்து உரையாற்றுவதற்கு எதிர்க்கட்சியின் சார்பில் நேரத்தை ஒதுக்கிக் கொடுப்பதற்கு மறுத்தமையை அடுத்தே அவர் தான் சுயாதீனமாகச் செயற்படவுள்ளதாக அறிவித்தார்.






புத்தகம் இணைய தளம் தமிழ்மென் பொருள் அறிமுக நிகழ்வு யாழ்.நாவலர் கலாசார மண்டபத்தில் சனிக்கிழமை இடம்பெற்ற போது இதன் இயக்குனர் விரிவுரையாற்றுவதை படத்தில் காணலாம் (மீரான்)

# இறுதிக்கட்ட யுத்தத்தின் போது ஐ.நா.வுக்கு இலங்கை அழுத்தம் கொடுக்கவில்லை

"யுத்தத்தின்போது இலங்கையில் செயற்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் முகவர் நிறுவனங்களுக்கோ ஐ.நா.வின் பணியாளர்களுக்கோ அரசாங்கம் ஒருபோதும் எவ்விதமான அழுத்தங்களையும் பிரயோகிக்கவில்லை" - இவ்வாறு அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

அச்சுறுத்தல்களை பிரயோகிக்கவில்லை. ஐ.நா. பணியாளர்கள் எவருமே அழுத்தங்களுக்கு உட்படவில்லை. ஐக்கிய நாடுகள் சபைக்கு ஒருநாடு அழுத்தமோ கட்டாயப்படுத்தலையோ பிரயோகிக்க முடியுமா? என பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரும் மனித உரிமைகள் குறித்த ஜனாதிபதியின் விசேட பிரதிநிதியுமான மஹிந்த சமரசிங்க கேள்வியெழுப்பினார்.

இலங்கையில் இறுதிக் கட்ட யுத்தத்தின்போது ஐக்கிய நாடுகள் செயற்பட்டவிதம் தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட ஐ.நா. உள்ளக விசாரணைக் குழுவின் அறிக்கை உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட முன்னர் அதுதொடர்பில் எதுவும் கூறமுடியாது என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சில் நேற்று நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு அமைச்சர் தெரிவித்தார்.

ஐ.நா. எம்முடன் இணைந்தே செயற்பட்டது. அதனை விடுத்து அழுத்தங்கள் எதுவும் இருக்கவில்லை. அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டதாக கூறப்படுவதை மறுக்கின்றேன்.

எதிர்வரும் 2013ம் ஆண்டு மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் 22வது கூட்டத்தொடரில் கலந்துகொண்டு நாங்கள் போருக்குப் பின்னரான நாட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் முன்னேற்றங்களை வெளிப்படுத்துவோம்.

அதில் சிறந்த முன்னேற்றங்களைக் காட்டமுடியும் என்பது எமது நம்பிக்கையாகும் எனவும் தெரிவித்தார்.

# ஆபாச காட்சிகளைக் கொண்ட இணையத்தளங்களுக்கு தடை

இலங்கைப் பெண்கள் மற்றும் சிறுவர்களின் ஆபாசப் புகைப் படங்கள் மற்றும் காணொளிகள் அடங்கிய இணையத்தளங்களை தடைசெய்வதற்கு சட்ட மா அதிபர் திணைக்களம் ஆரம்பித்துள்ளது.

இது தொடர்பிலான ஆய்வினை சட்ட மா அதிபர் திணைக்களம் மேற்கொண்டு வருவதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஆபாச இணையத்தளங்கள் தொடர்பில் பத்தரமுல்ல சிறுவர் நீதிமன்றத்திற்கு அறிவித்ததை அடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம், 51 ஆபாச இணையத்தளங்கள் தொடர்பிலான தகவல்களை பத்தரமுல்ல சிறுவர் நீதிமன்றத்தில் முன்வைத்ததாக அதிகார சபையின் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

இதேவேளை, 18 வயதிற்கு குறைவான யுவதிகளை பாலியல் நடவடிக்கைகளில் உட்படுத்துவதற்கு இடமளிக்கின்ற மற்றும் வாடகைக்கு அறைகளை வழங்கும் ஹோட்டல் உரிமையாளர்களை கைது செய்வதற்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பொலிஸ் மா அதிபரின் விசேட சுற்றுநிருபம் ஒன்றிற்கு அமைவாக இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்படுவதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது.

# வெலிக்கடையில் கைதிகள் தமக்குள்ளும் மோதல்!

வெலிக்கடைச் சிறைச்சாலை கைதிகள் இரண்டு பிரிவாக பிரிந்து தாக்குதல் நடத்தினரெனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சிறைச்சாலை ஆயுதக் களஞ்சியத்தை உடைத்து கைதிகள் இரண்டு குழுக்களாக பிரிந்து தமக்குள் மோதிக் கொண்டனரெனப் புலனாய்வுப் பிரிவினர் நடத்திய விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

கைதிகள் மோதிக் கொண்டதில் இரண்டு கைதிகள் கொல்லப்பட்டதுடன், பலருக்கு காயங்கள் ஏற்பட்டுள்ளன.

மோதலில் காயமடைந்த கைதிகளின் சிலர் தொடர்ந்தும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ஆயுதக் களஞ்சியத்தை உடைத்து சிலர் ஆயுதங்களை கொள்ளையிட்ட போதிலும், சிலருக்கு ஆயுதங்களைப் பயன்படுத்தும் ஆற்றல் இருக்கவில்லை எனவும், தற்செயலாக துப்பாக்கிகள் இயங்கியதனால் சிலர் காயமடைந்ததாகவும் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

# முல்லைத்தீவு கடற்பரப்பில் வெளியார் மீன்பிடிக்கத் தடை

முல்லைத்தீவு மாவட்டக் கடற்பரப்பில் வெளி மாவட்டத்தைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் எவரும் மீன்பிடித்தொழிலில் ஈடுபடத் தடை விதிக்க, முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தீர்மானித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் ஆதரவுடன் இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பபதாகவும், இந்த தடைத் தீர்மானத்திற்கு நீரியல் வளத் திணைக்களமும் இணங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

2009ம் ஆண்டுக்கு முன்னர் நாயாறு தொடக்கம் சுண்டிக்குளம் வரையான கடற்பரப்பில் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 3000 இற்கும் மேற்பட்ட கடற்தொழிலாளர்கள் தொழில் ஈடுபட்டு வந்தனர்.

தற்போது யுத்தத்திற்குப் பின்னர் 600 கடற்தொழிலாளர்களே தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந் நிலைக்கு முல்லைத்தீவு கடற்பரப்பில் அத்துமீறி மேற்கொள்ளப்படும் மீன்பிடியே காரணம் எனச் சுட்டிக்காட்டியுள்ள முல்லை சமாசம் இதனால் எதிர்வரும் காலங்களில் இவ்வாறான பாதிப்புகள் ஏற்படாத வகையில் எமது கடற்பரப்பில் அப்பகுதி கடற்றொழிலாளர்கள் மட்டுமே கடற்தொழிலில் ஈடுபட அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், அவ்வாறு அத்துமீறித் தொழிலில் ஈடுபடுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவும் தீர்மானித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

# கள்ளிக்குளம் வீதியின் அவலநிலை



வலிகாமம்

கள்ளிக்குளம் வீதிநிண்டகாலமாக புனரமைக்கப்படாததுடன் உரியபாலமும் நிர்மாணிக்கப்படாமையால் இந்தவிதிவழியாகப் பயணிக்கும் மக்கள்பெரும் சிரமங்களுக்கு உள்ளகின்றார்கள்.

அடம்பன் பிரதேசத்தின் கள்ளிக்குளம் கிராமத்தில் காணப்படும் விவசாயவீதியானதுமிக நீண்ட காலமாகபுனரமைக்கப்படாததுடன் அவ்வீதிக்கானபாலமும் அமைக் கப்படவில்லை இந்தவீதி கட்டுக் கரைகுளத்திற்குட்பட்டவிவசாயப்பகுதியின் பயன்பாட்டிற்க்கு உரிய தாகும்.

இப்பகுதியில் ஏறக்குறைய 100 ஏக்கருக்கும் மேற்பட்டவிவசாயக் காணிகள் வருடந்தோறும் செய்கை பண்ணப்படுகின்றதுஎனினும் இக்காணிநெற்செய்கையின் பொருட்டுபயன்படுத்தப்படும் அனைத்து உழவு இயந்திரங்களும் பாலமின்மையால் கால்வாயின் குறுக்காகவே இறக்கிஏற்றப்படுகின்றன இதனால் அவ்விடம் பாரியசிதைவுக்குள்ளாவதுடன் சொர்ணபுரி - கருங்கண்டல் வீதியும் சேதமடைந்துவருகின்றது.


அத்துடன் உழவு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும் அனைத்துஉழவு இயந்திரங்களும் இக்கால்வாயினுள் நிறுத்தியேகழுவப்படுகின்றன இதனால் கால்வாயின் இரு பகுதிகளும் சேதமடைந்துள்ளதுடன் நீர் விநியோகத்தின் போதுநீர் கால்வாயினைக் கடந்துவெளியேறும் நிலையும் தோன்றியுள்ளது.

இன்னும் இக்கள்ளிக்குளம் கிரா மத்தில் 10ற்கும் மேற்பட்ட குடும் பங்கள் மிகநீண்டகாலமாகவசித் துவருகின்றனர் இக்குடும் பங் களும் போக்குவரத்தில் மிகப்பாரிய சிக்கல்களை எதிர் நோக்குகின்றனர்,

இந்தமக்கள் தமதுபோக்குவரத்திற்குரயில் தண்டவாளங்களினால் அமைக்கப்பட்ட 03 அடிஅகலமானதற் காலிககடவையினையே பயன்படுத்துகின்றனர். இதனூடாகசாதாரணமாகமுச்சக்கரவண்டிகள் கூட பயணிக்கமுடியாது அவ்வாறிருக்கதிடீர் சுகயீனம் காரணமாகவேனும் எவரையும் எடுத்துச் செல்வதென்றால் மிகவும் சிரமாகக் காணப்படுகின்றது.

உரியபிரதேசசெயலாளர் மற்றும் விதிஅபிவிருத்திஅதிகாலசரப பிரதெச சபை என்பனஉரிய நடவடிக்கையெடுக்கமுன்வரவேண்டும் என பொதுமக்கள் வேண்டுகின்றார்கள்.

# இன்று மலரும் புத்தாண்டு முஹர்ரமே



உலக முஸ்லிம்கள் அனைவரும் மலரும் புத்தாண்டை எதிர்நோக்கியவராக முஹரம் பிறை அதன் ஆரம்பத்தில் கால்பதித்து இன்று அதவாது 16.11.2012 அன்று ஹிஸ்ஜ்றி 1433 வருடத்தை பூர்த்தி செய்து ஹிஸ்ஜ்றி 1434 ஆவது வருடத்தை எதிர்நோக்கி உள்ளனர்.

பிறக்கும் புத்தாண்டு ஸ்லாமிய வரலாற்று மாபெரும் பாக்கியம்! அன்ழறைய வரலாற்றில் நிகழ்ந்த "ஹஜ்ரத் நிகழ்வே" எம் இஸ்லாமிய வருடம் கணிக்க எடுத்துக் கொள்ளப்பட்ட எடுகோளானது என்று பேஷ் இமாம் மௌலவி ஏ. எம்.ஏ. அப்துல் அஸீஸ் விடுத்துள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

எம்பெருமானார் சல்லல்லாஹூ (அலை) அவர்கள் அலை அவர்கள் நபித்துவம் (நுபுல்வத்) பெற்று அல்லாஹ்வின் கட்டளை ஏற்று தூய ஸ்லாத்தை மதீனா நூக்கி எடுத்துச் சென்றதேதான் இன்நாள் ஆகும் தனித்துவம் மிக்க ஸ்லாம் தந்த தனித்துவம் மிக்க ஸ்லாம் தத்துவார்த்தமே இவ்வருடக் கணிப்பு என்றால் அது மிகையாகாது.

தமிழ், ஆங்கில, சிங்கள வருடங்கள் சூரிய சுழற்சியை அடிப்படையாகக் கொண்டே கணிக்கப்படும் வேளையதில் எம் வருடமோ சந்திர சுழற்சியையே அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்படுவது இங்கு ஈண்டு கூறக்கூடியது!

எம் தாய்நாடாம் இலங்கையில் கடந்துவிட்ட கசப்புணர்வுகள் கடந்த ஹிஜ்ரியதை மீட்டிப்பார்த்து, பெற்ற அனுபவங்களைக் கொண்டு, கிடைத்த உயர்வுகளை மதித்து, பட்ட காயங்களை மறந்து, வேற்றுமையில்லா ஒற்றுமையுடன் அனைவருடனும் சகோதரத்துடனும் சமத்துவத்துடனும் சந்தோஷமாக வாழ்ந்து வளம்பெற இந் நா ளில் உறுதி பூணுவோம்.

இறைவா! இம்மனு உயிர்கள் அனைத்து தம் சொந்தக்காலில் நின்று நிலைத்து ஜெயம் பெற நீ உறுதுணை புரிவாயாக என்று எம் இரு கரங்களை ஏந்திப் பிரார்த்திக்கின்றோம்! ஏற்கொள்வாயாக! எம்.துஆஅதனை!

தமிழ்நாதம்
Thamil Naatham

நவம்பர் மாதம் 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை

## முந்திரிக்கொட்டைப் பாணியில் கருத்து வெளியிடும் ஐ.நா. அதிகாரிகள்

பிரதம நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்காவுக்கு எதிரான குற்றவியல் பிரேரணையை இடைநிறுத்துமாறு ஐக்கிய நாடுகள் சபையிலிருந்து கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் தொடர்பான விஷேட நிபுணர் கெப்ரியல் க்னாவுல் என்பவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளாரெனச் செய்திகள் தெரிவிக்கின்றன. இலங்கை அரசாங்கம் நீதித்துறையைப் பாதுகாக்க முன்வர வேண்டுமென்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். இதற்காக உடனடியான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் எடுக்க வேண்டுமென்றும் வலியுறுத்தியுள்ளார்.

பிரதம நீதியரசர் மீது பதினான்கு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு, இக் குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டுமென்று 117 எம்.பிக்கள் கைச்சாத்திட்டு, விசாரணை நடத்தப் பாராளுமன்றத் தெரிவுக் கமிட்டியும் அமைக்கப்பட்டு, தெரிவுக் கமிட்டி தனது முதலாவது கூட்டத்தையும் நடத்தி முடித்த பின்னர்தான் இந்த ஐ.நா.வின் மனித உரிமை நிபுணர் கெப்ரியல் க்னாவுல் குற்றப் பிரேரணையை "உடன் நிறுத்து", "இடைநிறுத்து" என்றெல்லாம் கோரிக்கை விடுத்துள்ளார்.கடந்து போன பஸ்ஸுக்கு மனித உரிமைகள் நிபுணர் கப்ரியேல் கைகாட்டுகிறாரென்பது ஒரு புறமிருக்கட்டும்.

குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகும் எவருமே அவர்கள் குற்றவாளிகளென நிரூபிக்கப்படும்வரை நிரபராதிகளாகவே கணிக்கப்படுவார்கள். குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு விட்டதே என்பதற்காக எவருமே குற்றவாளிகள் ஆகிவிடுவதில்லை. எமது அரசியல் யாப்பின் 13(5) ஷரத்தின்படி பிரதம நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்கா குற்றவாளியென நிரூபிக்கப்படும்வரை நிரபராதியேதான். எழுந்தமானமாக ஒரு முடிவுக்கு வந்த பின்னர்தான் ஐ.நா.வின் மனித உரிமைகள் நிபுணர் "உடன் நிறுத்து" என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளார். அதாவது இலங்கையின் செயலாற்று அதிகாரமிகு ஜனாதிபதி தரப்புக்கும், நீதித்துறைக்குமிடையிலான மோதலென்ற ஒரு கணிப்பீட்டின் அடிப்படையிலேயே அவர் இவ்வாறான கருத்தை' வெளியிட்டிருக்கக் கூடும். ஐ.நா.வின் முன்னாள் அதிகாரியான சார்ள்ஸ் பெட்ரி என்பவரும் இலங்கை விவகாரங்கள் தொடர்பாகக் காரசாரமான கருத்துகளை வெளியிட்டிருக்கிறார்.

"நீதித்துறையைச் சேர்ந்தவர்கள் மீது உடல் மற்றும் உள ரீதியாக அரசாங்கம் மேற்கொள்கின்ற தாக்குதல்களை உடனடியாக நிறுத்த வேண்டும்" என்றும் கெப்ரியல் க்னாவுல் தெரிவித்துள்ளார். அதாவது நீதித்துறை சார்ந்தவர்கள் மீது குற்றச்சாட்டுகளை முன்வைப்பது ஏதோ பழிவாங்கும் நடவடிக்கையென்ற தீர்மானத்துக்கு ஏற்கனவே வந்துவிட்ட நிலையிலேயே அவர் தன்னிலை விளக்கத்தையும், தீர்ப்பையும் அளித்திருக்கிறார்.

நீதிபதிகள் பலர் தவறான செயற்பாடுகள் அல்லது பல்வேறு குற்றச்சாட்டுகளின் பேரில் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். இதுவொன்றும் இலங்கையில் மட்டும்தான் நடைபெறும் விடயமல்ல. போயா தினத்தன்று நீதிமன்றத்தைக் கூட்டி கசினோ சூதாட்ட முதலாளியொருவரைப் பிணையில் செல்ல அனுமதித்தமைக்காக முன்னாள் நீதிபதியொருவர் நீதிச் சேவை ஆணைக்குழுவினால் தண்டிக்கப்பட்டிருக்கிறார்.

ஆனால் இங்கே குற்றஞ்சாட்டப்பட்டிருப்பவர் பிரதம நீதியரசர் என்பதால், அவர் மீது ஏதோ பழிவாங்கும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பது போன்ற கருத்துகள் உருவாக்கப்பட்டுள்ளன. சந்திரிகா பண்டார நாயக்கா குமாரதுங்கா ஜனாதிபதியாக இருந்த காலத்தில்தான் ஷிரானி பண்டாரநாயக்கா உயர்நீதிமன்ற நீதியரசராக நியமிக்கப்பட்டார்.1996ஆம் ஆண்டு அவர் உயர்நீதிமன்ற நீதியரசராக நியமிக்கப்படும்பொழுது அவருக்கு எதிராக மூன்று அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. ஏழு நீதியரசர்களைக் கொண்ட உயர்நீதிமன்றமே ஷிராணி பண்டாரநாயக்கா மீதான குற்றச்சாட்டுகளை விசாரித்துத் தீர்ப்பளித்தது. பதினைந்து வருடங்களுக்குப் பின்னர்தான் இலங்கையின் முதலாவது பெண் பிரதம நீதியரசர் என்ற அந்தஸ்து ஷிரானி பண்டாரநாயக்காவுக்குக் கிட்டியது.

பிலிப்பைன்ஸிலும் ஒரு பிரதம நீதியரசர் மீது குற்றப் பிரேரணை முன்வைக்கப்பட்டுப் பதவி நீக்கப்பட்டிருக்கிறார். றெனாட்டோ சிகுறோனா என்ற பெயர்கொண்ட பிரதம நீதியரசர் மீது எட்டுக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. பிலிப்பைன்ஸின் 285 பாராளுமன்ற உறுப்பினர்களில் 188 பேர் கைச்சாத்திட்டுக் குற்றப் பிரேரணையைச் சமர்ப்பித்திருந்தனர். குற்றங்கள் நிரூபிக்கப்பட்டு அவர் கடந்த மே மாதம் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

இலங்கையில் பிரதம நீதியரசர் மீதான குற்றச்சாட்டு பற்றிய விசாரணை வெளிப்படைத் தன்மையுடன் இடம்பெறுவதில்லை. ஆனால் பிலிப்பைன்ஸில் விசாரணைகள் வெளிப்படைத் தன்மையுடன் இடம்பெறுவது வழக்கம். இலத்திரனியல் ஊடகங்கள் மூலம் குற்றவியல் பிரேரணை தொடர்பான விசாரணைகளைப் பார்க்கக் கூடிய சந்தர்ப்பம் பிலிப்பைன்ஸ் மக்களுக்கு இருக்கிறது.

இலங்கையில் பிரதம நீதியரசர் மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருப்பதை ஏதோ பழிவாங்கும் நடவடிக்கை என்பது போலவும் காட்டப்படுகிறது. நீதித்துறைக்கும் செயலாற்று அதிகாரமிகு ஜனாதிபதி முறைமைக்கும் இடையிலான இழுபறி போலவும் காட்ட முயற்சி எடுக்கப்படுகிறது. இதனால்தான் ஐ.நா.வின் சில அதிகாரிகளும் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளும் முந்திரிக் கொட்டைப் பாணியில் எழுந்தமானமாகக் கருத்துகளை வெளியிடுகிறார்கள்.

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
ஆசிரியர் பீட தொலைபேசி- 021-2219567 / பக்ஸ் 021-2219505,
விளம்பரம்/விநியோகம் : 021-2219506
e-mail: tnaatham@yahoo.com

# அமரர் பேராசிரியர் கைலாசபதி



## பத்திரிகையாளர், எழுத்தாளர், விமர்சகர், விரிவுரையாளர்

சோஷலிசத்தின் இலக்கு மனிதன்தான். தனிமனிதனின் சுதந்திர வளர்ச்சியானது அனைத்து மனிதர்களின் சுதந்திர வளர்ச்சியோடு பின்னி பிணைந்துள்ளது. இத்தகைய மனித குலத்தின் இலட்சியத்தை தமது எழுத்தாலும், நடைமுறையாலும் செயற்படுத்த முனைந்த கைலாசபதி பற்றிச் சிந்தித்தபோது மேற் குறித்த வரிகள் நினைவில் நிலைத்து நிற்கின்றன.

இருபதாம் நூற்றாண்டு பெற்றுத் தந்த தலை சிறந்த ஆய்வு அறிஞர்களில் கைலாசபதியும் ஒருவர். கால் நூற்றாண்டு தமிழியல் வரலாற்றில் தனித்துவமான ஆளுமைச் சுவடுகளைப் பதித்த அவர் பத்திரிகையாளர், எழுத்தாளர், விமர்சகர், விரிவுரையாளர் - பேராசிரியர், முதலாவது யாழ் வளாகத் தலைவர், கலைப்பீடாதிபதி எனப் பல்துறை சார்ந்த ஆளுமைகளை தன்னகத்தே கொண்டிருந்தார். இத்தகைய சமூதாயம் சார்ந்த அவரது ஆளுமைகளே அவரைச் சிறந்ததொரு முன்மாதிரியாகக் கொள்கின்ற போக்கு வளர்வதற்கு காரணமாக அமைந்தது.

கைலாசபதியின் எழுத்துக்கள் கடந்த அரை நூற்றாண்டு காலத்தில் பல்வேறு பதிப்புகளாக வெளிவந்துள்ளன என்பது உண்மையே. ஆயினும் அவரது எழுத்துக்கள் அனைத்தையும் உள்ளடக்கிய அடக்கப் பதிப்பொன்று இதுவரை வெளிவராமை சிந்தனைக்குரியதே. அவ்வாறே கடந்த காலங்களிலும் இன்றைய நாளிலும் கைலாசபதியின் பங்களிப்புக் குறித்த ஆக்கபூர்வமான முழு நிறைவான ஆய்வுகள் இதுவரை வெளிவரவில்லையாயினும் குறிப்பிடத்தக்க சில ஆய்வுகள் பிரசுரமாகியுள்ளன என்பதும் மனங் கொள்ளத்தக்கதாகும். அவ்வாறு குறிப்பிடத்தக்க கட்டுரைகள், நூல்கள் சிலவற்றை முற்போக்கு மார்க்ஸிய முகாமைச்சார்ந்த அறிஞர்களாலேயே எழுதப்பட்டவை. இவ்வெழுத்து முயற்சிகள் பெரும்பாலும், இலக்கியதியில் கைலாபதியின் எழுத்துக்கள் செலுத்தும் முக்கியத்துவத்தையும் அவற்றின் தாக்கங்களையும் இவர்கள் செவ்வனே உணர்ந்து எழுதியுள்ளனர். குறுகிய வரம்புகளைக் கடந்து தேசிய சர்வதேசிய நோக்கில் அவ்வாய்வுகள் வெளிவந்துள்ளமை அதன் பலமான அம்சமாகும்.

இலக்கிய வரலாற்றினை ஊன்றிக் கவனிக்கின்றபோது ஒரு உண்மை தலைத் தூக்குவதைக் காணலாம். அதுதான் இலக்கியத்திற்கும் சமூதாயத்திற்கும் இடையிலான உறவு குறித்த பிரச்சினையாகும். இலக்கியத்தின் நித்தியத்துவம் குறித்து காலத்திற்கு காலம் வாதப் பிரதிவாதங்கள் தோன்றிய வண்ணமே உள்ளன.

கலை இலக்கியம் என்பது தெய்வீகத் தன்மை வாய்ந்தது எனவும் அது தெய்வத் திருவுடைய கலைஞரால் படைக்கப்படுகின்றது எனவும் பிரமைகள் கற்பிக்கப்படுகின்றன. இப்பார்வையானது, ஒரு புறத்தில் பரந்துப்பட்ட வெகுஜனங்களையும் மறுப்புறத்தில் இலக்கிய கர்த்தாவையும் வைத்து நோக்குகின்ற வெகுசஜன விரோதப் பண்பாடாகும்.

இன்னொரு புறத்தில் தேசிய, பிரதேச, இன, மொழி,, சாதி, மத அடையாளங்களைக் கொண்டு மனிதகுல விடுதலைக்கு எதிராகப் பாவிக்கின்ற கபடத்தனங்கள் இலக்கியத்தில் நிலை நிறுத்தப் படுகின்றன. "கல்தோன்றி மண் தோன்றா காலத்திற்கு முன்னே வாலோடு தோன்றியது மூத்த தமிழ்" , "குறித்த இனம், சாதி பற்றிய படைப்புகளை அவர்களால் மட்டுமே உருவாக்க முடியும்" போன்ற வாதங்களை உற்று நோக்குகின்ற போது இவ்விலக்கியப் போக்கின் தாக்கங்களைக் காணமுடிகின்றது. பராம்பரிய மரபுகளை அப்படியே ஏற்றுக் கொண்டு அதனை தமது வர்க்க நலன்களுக்கு ஏற்றவகையில் விளக்கமளிக்கின்ற பண்டிதர்கள் ஒரு புறத்தில் ஆர்ப்பரித்து நிற்க, மறுபுறத்தில் பாராம்பரிய மரபுகள் யாவும் ஆதிக்க சக்திகளின் நலனையே பிரதிபலிக்கின்றன என அவற்றை மறுத்து தூய பாட்டாளி வர்க்க கலைக் கோட்பாட்டை முன்வைக்கின்ற அதி தீவீரவாதிகள் இன்னொரு புறத்தில் ஆர்பரித்து நிற்பதே யதார்த்தமகிவிட்டதோர் சூழலைக் காணக் கூடியதாக உள்ளது.

**எஸ்.முத்துக்கிருஷ்ணன்**

கலை இலக்கியம் என்பது சமூதாயத்திலிருந்து தோன்றி அது சமூதாயத்தை மேம்படுத்துகின்றது என்ற இலக்கியப் போக்கானது மனிதனையும் அவனது செயற்பாடுகளையும் ஆக்கபூர்வமான திசையில் இட்டுச் செல்கின்றது. "மனிதர் உணவை மனிதர் பறிக்கும்" வழக்கத்தை மாற்றி புதிய சமூதாயத்தை நிர்மாணிக்கும் எண்ணகணகற்ற விவசாயிகள், தொழிலாளர்கள், மாணவர்கள் புத்தி ஜீவிகள் இன்னும் இத்தகையோரின் போராட்டங்களில் வலிமை மிக்க ஆயுதமாக கலையும் இலக்கியமும் விளங்குகின்றது என்பது மக்கள் இலக்கிய கர்த்தாக்களின் நிலைப்பாடாகும். அந்த வகையில் இவ்வணியினர் பராம்பரிய மரபுகளை ஒடுக்கும் வர்க்க மரபுகள் ஒடுக்கப்படும் வர்க்க மரபுகள் எனக் கண்டறிந்து அவற்றினை சமூக மாற்றப் போராட்டத்திற்கு ஏற்ற வகையில் ஒழுங்கமைத்துக் கொள்ளும் அணுகுமுறையை இவர்கள் முன்மொழிகின்றனர்.

கைலாசபதி இந்த மூன்றாவது அணியினையே சார்ந்து நின்றார். அவர் வாழ்ந்த காலப்பகுதில், நமது கலாசாரம், பண்பாடு, பாரம்பரியம், இலக்கியத்தில் மக்கள் சார்புப்பண்பு என்பன கடும் சோதனைக்குட்பட்டிருந்த காலமாகும். இத்தகைய காலச் சூழலில் தமது எழுத்தால், செயற்பாட்டால் மக்கள் சார்பு இலக்கியக் கோட்பாட்டினை நிலை நாட்டியதில் கைலாசபதியின் பங்களிப்பு முக்கியமானது. எனவே கைலாசபதியின் இலக்கிய, அரசியல் கொள்கை நடைமுறை, அதன் செல்வாக்கு என்பவற்றினை ஆராய்தல் வேண்டப்படுவதாகும்.

கைலாசபதி 1933 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5ஆம் திகதி மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூரில் பிறந்தார். இவரது தந்தையின் பெயர் இளையதம்பி கனகசபாபதி. தாயாரின் பெயர் தில்லைநாயகி நாகமுத்து. யாழ்பாண சமூகத்தை சேர்ந்த கைலாசபதியின் பெற்றோர்கள் தமது தொழில் நிர்ப்பந்தம் காரணமாக மலேசியாவில் சில காலம் வாழ்ந்தனர். இவரது தந்தை அங்கு படவரைஞராகப் பணிபுரிந்தவர்.

கைலாசபதி மலேசியாவில் விக்டோரியா இன்ஸ்டிடியூட்டில் தமது ஆரம்பக் கல்வியை கற்றார். இரண்டாம் உலக யுத்தத்திற்கு பின்னர் 13வது வயதில் இலங்கைக்கு திரும்பினார். பின், தமது இடைநிலைக் கல்வியை யாழ். இந்துக் கல்லூரியிலும் உயர்தரக் கல்வியை கொழும்பு றோயல் கல்லூரியிலும் கற்று, பட்டப் படிப்பினை இலங்கை பல்கலைக்கழகத்திலும் (பேராதனை வளாகம்) கற்றார். பேராதனை பல்கலைக்கழகத்திலயே தமது முதுமாணிப் பட்டத்தினையும் பெற்றார். பின்னர் கலாநிதிப் பட்டத்தினை இங்கிலாந்திலுள்ள பர்மிங்ஹாம் பல்கலைகழகத்தில் முடித்தார்.

கலாசபதிக்கு யாழ்.இந்துக் கல்லூரியில் கற்றுக்கொண்டிருந்த காலப்பகுதியில் மார்க்சியத் தத்துவ அறிமுகம் கிடைத்தது. அத்தத்துவத்தின் ஒளியிலேயே அவர் தமக்கான சமூக நோக்கையும் உலக கண்ணோட்டத்தையும் பெற்றுக் கொள்கின்றார். "வளரும் பயிரை முளையிலே தெரியும்" என்பதற்கமைய பள்ளிப் பருவம் முதலே தமக்கான பார்வையை தெளிவாகவும் தீட்சண்யத்துடனும் வளர்த்துக் கொள்கின்றார். இது குறித்து கைலாசபதிக்கு மார்க்சிய தத்துவார்த்த பார்வையை வளம்படுத்தியவர்களில் ஒருவரான மு.கார்த்திகேசனின் பின்வரும் வரிகள் கவனத்தில் கொள்ளத்தக்கது.

"எனது வகுப்பு மாணவர்களில் பலர் பரலோகம் செல்வதற்காகச் சூளுவான வழியைக் கண்டு பிடித்தார்கள். அவர்களிடம் தேவாரம், திருவாசகம், பைபிள், குர்ஆன் இருக்கும். அவர்களுள் வித்தியாசமாக ஒரு மாணவன் இருந்தான். அவன் சமூக விஞ்ஞான நூல்களை வைத்துக் கொண்டு பூலோகத்தை பார்க்கத் தலைப்பட்டான். அவர்களோ வானம் பார்த்த பரலோகவாதியானார்கள். இவனோ பரலோகம் பார்த்த சமூகவிஞ்ஞானியானான். அந்தச் சுட்டி மாணவன்தான் கைலாசபதி."

கைலாசபதி தமது பாடசாலைப் பருவத்திலே சிறுகதை, கவிதை, நாடகம், இசை எனப் பல்துறைகளில் ஆர்வம் கொண்டிருந்ததுடன் பல ஆக்கங்களையும் எழுதியுள்ளார். அக்காலத்தில் தமிழ் மணி, இந்துசாதனம், சுரபி, யுகம், வீரகேசரி முதலிய இதழ்களிலும் அவரது ஆக்கங்கள் பிரசுரமாகியுள்ளன. (7ம் பக்கம் பார்க்க)

# ஜீ.ஏ.சந்திரசிறி தலைமையில் யாழில் கோலாகலமான 15ஆவது ஆளுநர் மாநாடு



15 ஆவது ஆளுநர் மாநாடு நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகியது. யாழ்ப்பாணம் ரில்கோ ஹோட்டலில் நேற்றுக் காலை ஆரம்பமான இந்த மாநாட்டில் இலங்கையில் உள்ள 9 மாகாணங்களின் ஆளுநர்களும் கலந்துகொண்டுள்ளனர். 14ஆவது ஆளுநர் மாநாட்டின் தலைவரான மேல்மாகாண ஆளுநர் அலவி மௌலான, 15ஆவது ஆளுநர் மாநாட்டுக்கான தலைமைப் பொறுப்புக்களை வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிரியிடம் ஒப்படைத்தார். நிகழ்வின்போது எடுக்கப்பட்ட படங்களை இங்கு காணலாம்.

## அமரர் பேராசிரியர் கைலாசபதி பத்திரிகையாளர், எழுத்தாளர்...

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவர் எழுதிய நாடகங்கள் பல இலங்கை வானொலியில் ஒலிபரப்பு செய்யப்பட்டுள்ளன. இவ்வகையில் கைலாசபதியின் பல பரிசோசனை முயற்சிகளினூடாகவே தமக்கான விமர்சனத் துறையை தேர்ந்தெடுத்துள்ளார் என்பதை அறிய முடிகின்றது.

கைலாசபதி பல்கலைகழகத்தில் மாணவராக கற்கைநெறியை தொடர்ந்திருந்த காலத்தில் பேராசிரியர்கள் க.கணபதிபிள்ளை, வீ.செல்வநாயகம், சு.வித்தியானந்தன் முதலாலோனரிடம் கற்கக் கூடியதும் அவர்களுடன் சேர்ந்து சமூக செற்பாடுகளை ன்னெடுக்க கூடியதுமான வாய்ப்புகள் கிடைக்கப்பெற்றார்.

1957 ஆம் ஆண்டு தமிழைச் சிறப்புப் பாடமாக கொண்டு பயின்ற கைலாசபதி முதலாம் வகுப்பில் சித்தியடைந்தார். இந்தத் தகைமையை பயன்படுத்தி அவர் வெளிநாட்டு புலமைப் பரிசில் பெற்றோ அல்லது வேறு நிருவாக துறைசார்ந்த பதவிகளிலோ பிரகாசித்திருக்க முடியும். கைலாசபதி அவ்வாறு செய்யவில்லை. மாறாக தனது துறைக்கான களமாக பத்திரிகைத் துறையை தேர்ந்தெடுத்துக் கொண்டார். தினகரன் பத்திரிகையில் முதலில் உதவி ஆசிரியராகவும் பின்னர், மிகக் குறுகிய காலத்திலேயே பிரதம ஆசிரியராகவும் நியமிக்கப்பட்டார்.

1961 இல் கைலாசபதி பத்திரிகைத் துறையிலிருந்து விலகிப் பேராதனைப் பல்கலை-கழகத்தில் உதவி விரிவுரையாளராக நியமனம் பெற்றார். இந்தச் சூழலை கைலாசபதி தமது தமிழியல் ஆய்வுத்துறை விருத்திக்கு சாதகமானதோர் களமாகப் பயன்படுத்திக் கொண்டார்.

963 ஆம் ஆண்டளவில் தமது கலாநிதி பட்டப்படிப்பிற்காக புலமைப் பரிசில் பெற்று இங்கிலாந்தில் உள்ள பர்மிங்ஹாம் பல்கலைக்கழகத்திற்கு சென்றார். இக்காலத்தில் அவரது மர்க்சியப் பார்வையை வளம்படுத்தியதில் பேராசிரியர் ஜார்ஜ், தொம்சனுக்கு முக்கியமானவர்.இவரது மேற்பார்வையின் கீழ் வுயஅடை ர்நசழநை ீழநவசல என்ற ஆய்வேட்டினைச் சமர்பித்தார். தக்க ஆதாரங்களுடனும் சமூதாயக் கண்ணோட்டத்துடனும் சங்கச் செய்யுள்களை கிரேக்க வாய்மொழி இலக்கியங்களுடன் ஒப்பு நோக்கி, அப்பாடல்களின் பரவுத் தன்மை, மக்களின் எழுத்தறிவு, அவற்றின் உள்ளடக்கம், வடிவம் என்பனவற்றினை ஆதாரமாகக் கொண்டு சங்ககாலச் செய்யுள்களை வாய்மொழி இலக்கியம் என நிறுவினார். இவ்வாய்வு முயற்சி, தமிழில் சங்க இலக்கியம் குறித்து புதிய பார்வைகளும் ஆய்வுகளும் தோன்ற ஆதர்சமாக அமைந்தது.

பல்கலைகழகம் சார்ந்த பணிகளுடன் மட்டும் கைலாசபதி தம்மை மட்டுப்படுத்திக் கொள்ளவில்லை. அவர் பல்கலைகழகத்திற்கு அப்பாலும் பல பொறுப்புகளை வகித்துள்ளார். யுனெஸ்கோவுக்கான தேசிய ஆணைக்குழு (1970), இலங்கைப் பாடநூல் ஆலோசனைக் குழு, இலங்கை பல்கலைகழக மக்கள் தொடர்பு ஆய்வுக் கழகம்(1971-74), இலங்கை வானொலி தமிழ் நிகழ்ச்சி ஆய்வுக்குழு(1973) எனப் பல பணிகளை மேற்கொண்டுள்ளார்.

1974 இல் யாழ்.பல்கலைகழக வளாகம் ஸ்தாபிக்கப்பட்டபோது அதன் முதலாவது வளாகத் தலைவராக, பேராசிரியராக நியமிக்கப்பட்டவர் கைலாசபதி. யாழ். பல்கழகம் உருவாக்குவதற்கு எத்தகைய முயற்சிகளை மேற்கொண்டாரோ அவ்வாறே அது உருவாகிய பின்னர் அதன் இலக்கினை அடைவதற்காகவும் தன்னால் முடிந்த முயற்சிகளை மேற்கொண்டார்.

1977 இல் கைலாசபதிக்கு தமது வளாகத் தலைவருக்கான பதவிக் காலம் முடிந்ததுடன் அவர் அதே பல்கலைகழகத்தில் பேராசிரியராக கடமையாற்றினார். அக்காலப் பகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தோல்வியடைந்து, ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்திருந்தது. இக்காலத்தில் கைலாசபதி தாங்கவொன்னா துன்பங்களை அனுபவித்துள்ளதை திருமதி. சர்வமங்களம், செ.கணேசலிங்கன் முதலானோரின் குறிப்புகளில் காணக் கூடியதாக உள்ளது.

மேலும், கைலாசபதி இந்திய பல்கலைகழகங்களிலும் உயர்கல்வி நிறுவனங்களிலும் மற்றும் அயோவாப், கலிபோர்னியப் பல்கலைக்கழகளிலும் வருகை தரு அதிதிப் பேராசிரராக கடமையாற்றியுள்ளார். இத்தகைய ஆளுமை உள்ளீடுகளை கொண்டிருந்த கைலாசபதி 1982 இல் டிசம்பர் மாதம் ஆறாம் திகதி தான் சிந்திப்பதை நிறுத்திக் கொண்டார். இவரது இழப்பு இருபதாம் நூற்றாண்டுத் தமிழியல் ஆய்வுத்துறையில் ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

கைலாசபதி பாடசாலை மாண-வராக இருக்கும் காலம் முதலே பல வகை நூல்களை வாசிக்க தலைப்பட்டிருந்தார். அக்காலத்தில் பொதுமக்களிடையே பெரும் செல்வாக்கு பெற்றிருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தாரின் வெளியீடுகளான "கம்பரசம்", "ஆரிய மாயை", "தீ பரவட்டும்", "நாடும் ஏடும்", "நிலையும் நினைப்பும்", "பரமசிவனுக்குப் பகிரங்க கடிதம்", "பரந்தாமனுக்குப் பகிர்ந்த கடிதம்" முதலிய நூல்களை வாசிப்பதில் ஆர்வம் காட்டினர். அவ்வாறே, பாரதிதாசன், புதுமைப்பித்தன், ரகுநாதன், மு.வரதராஜன் சுத்தானந்த பாரதி, ச.து.சு. யோகியார். முதலியோரின் ஆக்கங்களை வாசிப்பதிலும் கூடிய ஆர்வம் காட்டி வந்திருப்பதை கவிஞர் இ.முருகையனின் நினைவுக் குறிப்புகளில் காண முடிகின்றது.

மேலும் கைலாசதிக்கு பாடசாலை மாணவராக இருந்த காலத்தில் தமிழில் எவ்வாறு தேர்ச்சி பெற்றவராக காணப்பட்டாரோ அவ்வாறே ஆங்கில மொழியிலும் புலமை மிக்கவறாக காணப்பட்டார். சில ஆங்கில இலக்கிய விமர்கர்களின் நூல்களை வாசிப்பதில் அவர் தீவிர கவனமெடுத்துள்ளார் என்பதை அவரது எழுத்துக்களில் காணக்கூடியதாக இருக்கின்றது. குறிப்பாக எலியற், எஃப்.ஆர்.லீவிஸ், சிசில் டேய் லூயி, ஸ்ரிஃபன், ஸ்பெண்டர், முதலிய விமர்சகர்களும் டி.எச். லோறன்ஸ், பேணாட் ஷோ, ஜேம்ஸ்ஜோஸ், வேஜினியா வூல்ஃப், ஷேக்ஸ்பியர், மாக்ஸிம் கார்க்கி மாயாகோல்ஸ்கி, ஏஸ்ட்ராவ்கி, பெட்டோஃபி, லூசுன், பெர்ட்டோல் பிரெஸ்ட், நெருடா முதலிய படைப்பாளிகளும் கைலாசபதிய-ினால் வாசிக்கப்பட்டவர்கள் என்பதனை அவரது எழுத்துக்களின் ஊடாக அறிய முடிகின்றது. இவ்வாறு வாசிப்பதில் மட்டுமன்று அதனை நண்பர்கள் மாணவர்கள் மத்தியில் கலந்துரையாடுவதிலும் கைலாசபதி ஆர்வம் காட்டியிருந்தார். நண்பர்களுக்கு எழுதுகின்ற கடிதங்கள், ஒருவகையில் அவை கூட ஒரு சமூதாயம் சார்ந்ததாக இலக்கியம் குறித்த உரையாடலாகவே அமைந்துள்ளது.

1953 இல் பதுளையை சேர்ந்த தனது கல்லூரி நண்பனுக்கு எழுதிய கடிதம் பொறுத்து என். கே.ரகுநாதன் இவ்வாறு சுட்டிக்காட்டுகின்றார்.

"சொந்தவிவகாரங்கள் ஏதுமில்லை. படித்த இலக்கிய புத்தகங்களிலிருந்து குறிப்புகள், விடேட ரசனைகள், பல புத்தகங்களைப் பற்றி அறிமுகக் குறிப்புகள்- ஆங்கில நூல்கள் உட்பட சிங்காரம் சொல்வார்: நண்பர்களுடன் பேசிக்கொண்டிருந்து விட்டு, விரைவில் முடித்துக் கொண்டு ஏதாவதொரு குறைப்புத்தகத்தைப் படிக்க ஓடி விடுவாராம். கடிதங்களிலும் அந்தப் புத்தகம் கிடைத்துள்ளது: இந்தப் புத்தகம் வாங்க வேண்டும்: படித்த பின் அதையிட்டு எழுதுகின்றேன்- இப்படியெல்லாம், பிற்கால இலக்கிய ஆதர்சனங்களுக்கு அப்போது அடிகோலினார் போல் தெரிகிறது"

இவ்வாறு பல்வேறு நூல்களை கற்று தேர்ந்த கைலாசபதி வாழ்விலிருந்து அந்நியப்படவிடாமலும் தொலைத்தூர தீவுக்குள் ஒதுங்கி விடாமலும் தன் கரித்திர தூரிகையை நகர்த்தி சென்றுள்ளமைஅவரது சிந்தனைத் தெரிவினை காட்டுகின்றது. தான் பெற்ற அறிவை மாறி வருகின்ற சூலுக்கு ஏற்ப, தமிழ் மரபுக்கு ஏற்ப பொருத்தி பார்த்து எமது சூழலுக்கான விமர்சப் பார்வையொன்றை உருவாக்கி, புத்தகவாத சிந்தனைக்கப்பால் நடைமுறைக்கான செயற்திறனை வலியுறுத்துகின்ற பண்பை அவரது எழுத்துக்களில் காணக் கூடியதாக உள்ளது.

கைலாசபதி பின்னாட்களில் ஆற்றல் வாய்ந்த விமர்சராக ஆய்வளராக பிரபல்யம் அடைந்ததனால் அவரை விமர்சகராக ஆய்வாளராக பார்க்கின்ற நிலையே உள்ளது. அப்பார்வை ஒரு விதத்தில் சரியானதும் கூட. அதே சமயம் அவர் தமது ஆரம்ப காலங்களில் கவிதைகள், சிறுகதைகள், சிலவற்றினையும் எழுதியுள்ளார். சுமார். 40 நாடகங்கள் எழுதியுள்ளதாக அறிய முடிகின்றது. அவரது பெரும்பாலான நாடகங்கள் இலங்கை வானொலியில் ஒலிபரப்பு செய்யப்பட்டுள்ளன. நத்தார் பெருநாளையொட்டி "கல்லறைக்கு எதிரில்" என ஒரு நாடகம் ஆக்கினார். அவ்வாறே புதுமை பித்தனின் "கபாடபுரம்" கைலாசபதியினால் நாடகமாக்கப்பட்டுள்ளன. "குரல்கள்" என்ற நாடகத்தையும் எழுதியுள்ளார். என கவிஞர் இ.முருகையர் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறே அவர் நாவல் எழுதும் முயற்சியிலும் ஈடுப்பட்டுள்ளார். அக்காலத்தில் பொருளாதார நோக்கத்திற்காக யாழ்ப்பாணத்தவர் பலர் மலேசியாவிற்கு புலம் பெயர்ந்துள்ளனர். இரண்டாம் உலக யுத்தக் காலத்தில் அவர்கள் எதிர் நோக்கிய பிரச்சனைகள் குறித்து நாவல் எழுதும் முயற்சியிலும் அவர் ஈடுபட்டிருந்ததாக அறிய முடிகின்றது. அத்துடன் பாரதி பற்றியும் தனிநூல் எழுதும் முயற்சிலும் ஈடுபட்டிருந்ததை கைலாசபதி பற்றி வெளிவந்த குறிப்புகளில் காணமுடிகின்றது.



# பேதங்களை மறந்து செயற்

## UR Friend Foundation நிறுவுனர் க.

செவ்வி கண்டவர் - சரணிகா

**யாழ்** மாவட்டம் அடங்கலாக வடமாகாணம் எங்கும் போரினால் நேரடியாகவும் மறைமுகமாவும் பாதிக்கப்பட்டப் பிரதேசங்களில் தனது சேவைகளை ஆற்றி வருகிறது உங்கள் நண்பன் அறக்கட்டளை நிறுவனம்(ருசு குசநைனெ குழரனெயவழைெ). பிரதான-மாகக் கல்வி முன்னேற்றத்தை இலக்காகக் கொண்டு இயங்கிவரும் இந்தத் தன்னார்வத் தொண்டு நிறுவனம் அதனைப் பாதிக்கும் பல்வேறு காரணிகளை நீக்கி சிறார்களின் கற்றல் ஆர்வத்தைத் தூண்டும் வகையிலா-கச் செயற்பட்டு வருவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

மற்றையத் தொண்டு நிறுவனங்களின் செயற்பாடுகளி லிருந்து இந்தத் தொண்டு நிறுவனத்தின் அணுகுமுறை மாறுபட்டிருப்பதை காணலாம். வெறுமே உதவிகளை வழங்கிவிட்டு அவற்றைப் பத்திரிகைச் செய்திகளாகக் காண்பதுடன் அடங்கி விடாது அவ்வுதவிகள் முறையா கப் பயன்படுவதை உறுதி செய்வதற்கு இந் நிறுவனம் தொடர்ச்சியாகக் கண்காணிப்பதையும் அதையொட்டிய தொடர் சேவைகளைச் செய்து வருவதையும் தனது வேலைத்திட்டமாகக் கொண்டு இயங்கி வருவதை நாம் கண்டோம்.

அது மட்டுமல்ல இந் நிறுவனத்தின் தொண்டர்களுடன் அதன் நிறுவுனரும் தலைவருமான திரு கதிரவேல் செவ்வேள் அவர்களும் அடிக்கடி நேரடியாகக் களத்தில் இறங்கிச் செயலாற்றி வருவதை அவதானித்த நாம் வித்தியாசமாகச் செயற்படும் இந்நிறுவனத்தின் வேலைத் திட்டம் சம்பந்தமாகவும் செயற்பாடுகள் சம்பந்தமாகவும் அறிந்து கொள்ள திரு.கதிரவேல் செவ்வேள் அவர்களை நேரில் சந்தித்து உரையாடினோம். அவை கேள்வி பதில் வடிவில் கீழே விரிகிறது.

**கேள்வி:** இப்படி ஒரு நிறுவனத்தை ஆரம்பிக்க வேண் டும் என்ற எண்ணம் தங்களுக்கு எதனால் ஏற்பட்டது?
**பதில்:** போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலங்களிலே எமது மக்கள் பட்ட அவலங்களை புலம் பெயர் நாடெ-ான்றில் இருந்து ஊடகங்கள் மூலம் அறிந்து மிக மனம் வருந்தியவர்களில் நானும் ஒருவன். அந்த வேளையிலே என்னால் மனம் வருந்த முடிந்ததே ஒழிய அந்த அவலங்களை நிறுத்த எதையுமே செய்ய முடியவில்லை. எனினும் போரின் தாக்கத்தால் மக்கள் இடம் பெயர்க் கப்பட்டு வவுனியா இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்த வேளையிலே கூட துன்பங்களுக்கு முகம் கொடுக்கும் துர்ப்பாக்கிய சூழல்பற்றி அறிந்து உடனடியாகவே இலண்டனிலிருந்து வந்து அந்தமுகாம் களில் இருந்த மக்களைச் சந்தித்தேன். என் அறிவுக்கெட்டிய வரையில் அந்த மக்களை புலம் பெயர் தேசத்திலிருந்து சென்று பார்த்த முதல் தமிழன் நான-ாகத்தான் இருந்தேன். அங்கு நான் கண்டவை எனது பல நாட் தூக்கத்தையே பறித்துச் சென்று விட்டன. வாழ்வின் அனைத்தையும் போருக்குப் பலி கொடுத்து விட்டு நடைப்பிணங்களாக இருந்த கோலங்கள் இன்றும் என் மனதில் வடுக்களாக இருக்கின்றன. நான் நினைத்து வந்ததை விட பன்மடங்கு இழப்புகளுடன் எமது மக்கள் இருந்தார்கள்.

அவர்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என நினைத்தேன். சில இலட்சங்கள் செலவில் அவர்களுக்கான மலசலகூடங்கள், கூரைத்தகடுகள், மருந்துப்பொருட்கள், உடைகள், குழந்தைகளுக்கான பால்மா வகையறாக்கள், படுக்கைகள் போன்றவற்றை என் சக்திக்கு உட்பட்ட வகையில் ஏற்பாடு செய்து கொடுத்தேன். என்றாலும் அவை போதாது. யானைப் பசிக்குச் சோழப் பொரியிலும் அற்பமானது என உணரவும் என்னால் முடிந்தது. இப்போது தான் சேவைகளை நிறுவன மயப்படுத்த வேண்டிய அவசி யத்தை நான் உணர்ந்தேன். இது இன்று சாத்தியமாகி எமது நிறுவனம் தனது சேவையுடன் மூன்றாவது ஆண்டு நிறைவை நோக்கி நடந்து கொண்டிருக்கிறது.

**கேள்வி:** உங்கள் சேவைகளுக்கான நிதி மூலத்தை எங்கிருந்து பெற்றுக்கொள்கிறீர்கள்?
**பதில்:** இதுவரை வெளியிலிருந்து எதனையும் நாம் பெற்றுக்கொள்ளவில்லை. எனது தனிப்பட்ட உழைப்பி லிருந்தே இத்தனையும் நாம் செய்து வருகின்றோம். சில உதவிகளை எனது தனிப்பட்ட நண்பர்கள் ஓரிருவர் தாமாக முன்வந்து எமது நிறுவனத்தினூடாக செய்துள்ள னர் என்பதையும் நன்றியுடன் இங்கு குறிப்பிட விரும்பு கின்றேன்.

**கேள்வி:** நீங்கள் மாதாந்தம் பல இலட்சக்கணக்கான ரூபாய்கள் பெறுமதியான சேவைகளை ஆற்றி வருவதாக அறிகின்றோம். தனியொரு மனிதராக எவ்வாறு இது முடிகிறது?
**பதில்:** இக்கேள்வியைப் பலரும் என்னிடம் கேட்டிருக் கின்றார்கள். பலரும் என்னைப் பெரும் செல்வந்தனா கவே கருதுகிறார்கள்.எனினும் இங்கே நான் உண்மை யைச் சொல்வதாக இருந்தால் Bank balance கூட என்னிடம் இல்லை. அதிர்ஸ்ட வசமாக என் தந்தை எனக்கு மிகச்சிறந்த கல்விப் பிண்ணனியைத் தந்திருப் பதால் இலண்டனில் நான் ஒரு சட்ட ஆலோசகராகக் கடமையாற்றுகின்றேன். அதிலும் பெரும்பான்மையான வழக்குகள் குடிவரவு குடியகல்வு சம்பந்தமானதாக இருப்பதால் பணம் சம்பாதிக்க முடிகிறது. அதை இந்த மக்களுக்காக நான் செலவு பண்ணுகின்றேன்.

**கேள்வி:** உங்கள் பதில் ஆச்சரியத்தைத் தருகிறது. புலம் பெயர்ந்து வாழ்ந்து வரும் பலரும் மேலும் மேலும் பணம் சேர்ப்பதையே எண்ணமாகக் கொண்டிருக்கும் நிலையிலே நீங்கள் மட்டும் இப்படியாகச் செயற்பட எப்படி முடிகிறது?
**பதில்:** உங்கள் கேள்வியில் சிறு திருத்தம். நீங்கள் சொல்வது போல் பலர் அங்கு இருந்தாலும்

இறைவனோ கர்ணனோ அல்லது வேறு யாராவது தேவர்களோ எனக்கு முன்னால் திடீரெனத் தோன்றி கொப்பியையோ பாதணியையோ தானமாகத் தரமாட்டார்களா என ஏங்கியதுண்டு. அறியாத அந்த வயதில் என்னுள் ஏற்பட்ட அந்தப் பாதிப்பு இன்றும் எனக்குள் வாழ்கிறது. இன்றைய வறிய குடும்பங்களை சேர்ந்த சிறாருக்கும் இவ்வாறான மனப் பாதிப்புகள் அதே போல் இல்லாவிட்டாலும் வெவ்வேறு வடிவத்தில் இருக்கும் என நான் உணருகின்றேன். இன்னும் சொல்லப் போனால் அன்றையதை விட இன்றைய காலகட்டத்தில் அது அதிகமாக இருக்கும் என உண முடிகிறது. அதற்குக் காரணமாக நடந்து முடிந்த போர் இருக்கிறது. இவ்வாறாகச் சிறு வயதில் எவருக்கும் ஏற்படக்கூடாது என நான் நினைக்கின்றேன். இது ஒரு காரணம்.

அடுத்தது தார்மீகக் கடமை. இந்தக் கடமை புலம்பெயர்ந்து வாழும் அத்தனைத் தமிழருக்கும் உண்டென நான் கருதுகின்றேன். உண்மையில் பலரும் புலம்பெயர்ந்து சென்று வெளி நாடுகளில் வாழ்வதற்குக் காரணமாக அமைந்தது அல்லது காரணமாகக்

**இன்றைய காலகட்டம் மிக முக்கியமானது. தனியொரு நபராலோ தனியொரு நிறுவனத்தாலோ எமது மக்களின் வாழ்க்கையை மீட்டெடுக்க முடியாது. சகல தரப்பும் தமது வேற்றுமைகளை மறந்து மக்களுக்காக ஒன்றிணைந்து சிறந்த ஒரு வேலைத்திட்டத்தின் அடிப்படையில் உழைக்க வேண்டிய தருணமிது. இதில் புலம்பெயர் தமிழரும் அடக்கம். இங்கு தேவைகள் மிக அதிகம். விரைந்து செயற்பட வேண்டும். காலத்தைத் தவறவிட்டால் பின்னர் எல்லோரும் வருந்த வேண்டி ஏற்படும். இணைந்து செயற்பட UR Friend Foundation இரு கை நீட்டி அழைக்கிறது. தடங்கல்களை எதிர் கொள்வது எமது நிறுவனத்தின் பொறுப்பு. செயற்படுவோமா?**

பெரும்பான்மையோர் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்காக தம்மை அர்ப்பணிக்கத் தயாராக இருக்கின்றார்கள் என்பதே உண்மை. அதை செய்யும் வழி தெரியாமல் தான் தவிக்கின்றார்கள். இங்கிருந்து அவர்களை யாராவது சரியாக, உண்மையாக நெறிப்படுத்தினால் தமது பெரும் பங்களிப்பை வழங்க அவர்கள் தயாராகவே இருக்கின்றார்கள்.

**கேள்வி:** தங்களது ஆர்வத்தைப் பற்றிக் கேட்டிருந்தேன்?
**பதில்:** ஆம். வருகின்றேன். எனது தொண்டு செய்யும் ஆர்வத்துக்கு இரண்டு அடிப்படைக் காரணிகள் உள்ளன. அடிப்படையில் நான் பரம்பரைச் செல்வந்த னல்ல. வறுமையைச் சொத்தாகக் கொண்டதே எனது குடும்பம். சிறுவயதிலே நானும் ஏங்கியிருக்கின்றேன். எனது தந்தையார் ஒரு சாதாரண ஆசிரியர். அந்தக் காலத்து ஆசிரியர்களின் வருமானம் இன்றுள்ளதைப் போல அல்ல. மிகப் பற்றாக்குறைகளுள்ள வாழ்க்கையை வாழ்ந்தது எமது குடும்பம். நானும் கூட அப்பியாசக் கொப்பி வாங்கப் பணமில்லாமல் ஆசிரியரின் தண்டனைக்குப் பயந்து பாடசாலைக்குச் செல்லாமல் இருந்திருக்கின்றேன். பாதங்களுக்குச் செருப்பில்லாமல் சுடு மணலிலும் கொதிக்கும் தார்ச்சாலைகளிலும் வெற்றுப் பாதம் வெந்து போக ஓடி ஓடி நடந்திருக்கின்றேன். அம்புலிமாமாக் கதைகளிலும் எமது புராண, இதிகாசங்களிலும் வருவது போல்

காட்டப்பட்டது இங்கு நடைபெற்ற உள்நாட்டுப் போர். அதே வேளை இங்கே அதே போரினால் எமது மக்கள் நேரடியாகவே பாதிக்கப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இழப்புகளையும் வேதனைகளையும் அவர்களே அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். புலத்தில் வாழும் நாமும் இப்போரினால் மனதளவில் பாதிக்கப்பட்டிருந்த போதிலும் பாதுகாப்பான உணர்வுடன் எமது அன்றாடக் கடமைகளையும் தொழில்களையும் பார்த்துக்கொள்ள முடிந்தது. பெருமளவு சம்பாதிக்கவும் முடிந்தது. அங்கு எமக்குக் கிடைத்த அங்கீகாரம் இந்த நாட்டில் நடந்த போரினால் ஏற்பட்டது.

வேறு வார்த்தைகளில் சொல்வதானால் இந்த நாட்டில் எமது மக்கள் பட்ட அவலங்களே புலம் பெயர்ந்து வாழும் தமிழரின் சொகுசு வாழ்க்கைக்கு அத்திவாரமாக அமைந்தது. எனவே மக்களின் அவல வாழ்விலிருந்து அவர்களை மீட்டெடுக்க வேண்டிய கடப்பாடு அரசாங்கத்துக்கும் சர்வதேசத்திற்கும் இருப்பதை விட புலம் பெயர் தமிழருக்கே உண்டு. அந்த நியாயத்தின்பாற் பட்டும் எமது சேவைகள் - சேவைகள் என்பதை விட கடமைகள் என்று சொல்லலாம். எமது கடமைகள் தொடர்கின்றன. (சிரிப்பு) பதில் மிக நீண்டதாகி விட்டதோ?

**கேள்வி:** மிக நல்லது. தங்களது நிறுவனத்தின் சேவைகள் மற்றைய நிறுவனங்களின் சேவைகளைப்

# …படுவோமா?

…செவ்வேள்

போலல்லாது வேறுபட்டு இயங்குவதை நாம் அவதானித்துள்ளோம். அது பற்றிக்கூற முடியுமா?
**பதில்:** எவ்வகையில் வேறுபடுகின்றது என்று சொல்ல முடியுமா?

**கேள்வி:** அனேக நிறுவனங்கள் மக்களுக்கு அல்லது பாதிக்கப் பட்டோருக்கு உதவிகளை வழங்கிவிட்டுச் சென்று விடுவதையே பரவலாகப் பார்க்க முடிகிறது. ஆனால் தங்கள் நிறுவனம் மட்டும் சேவைகளை வழங்குவதுடன் தொடர்ந்து அந்த மக்களுடன் பழகுவதையும் வழங்கும் உதவிகளின் பலாபலன்களைக் கண்காணித்து தொடர் சேவைகளாற்றி வருவதையும் பற்றியே கேட்கிறேன்.
**பதில்:** அதற்குக் காரணம் எமது நோக்கத்தில் நாம் தெளிவாக இருப்பது தான். மக்களின் விமோசனத்தை எமது பிரதான இலக்காகக் கொண்டு இயங்கி வருகின்றோம். அதனாலேயே எமது பணிகளை அவர்களுக்காற்றி வருகின்றோம். நமது சேவைகள் நாம் நினைக்கும் அனுகூலமான விளைவுகளைத் தராவிட்டால் வழங்கிய சேவையின் அர்த்தமென்ன?



**கேள்வி:** சற்று விளக்கமாகக் கூற முடியுமா?
**பதில்:** ஆம்! இதைச் சிறிய ஒரு உதாரணம் மூலம் விளக்கலாம். ஒரு பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு வாழ்வாதாரத்துக்காக கோழிகள் வளர்ப்பதற்கான கூடு உட்பட்ட சகல உதவிகளையும் வழங்குகின்றோம் என வைத்துக்கொள்ளுங்கள். அந்த உதவியின் மூலம் குறிப்பிட்ட அந்தக் குடும்பம் தன் வருமானத்தைப் பெற்றுக் கொள்ளும் சாத்தியம் உண்டா என்பதை முதலில் நாம் பார்க்க வேண்டும். அந்தக் குடும்பத்துக்கு கோழி வளர்ப்பு சம்பந்தமான அறிவு இல்லாவிடின் நாம் வழங்கிய அந்த உதவியின் பலன் எவ்வாறானதாக இருக்கும்? அதற்காக உதவியை வழங்காது இருப்பதென்பதல்ல அதன் அர்த்தம். மாறாக அந்த உதவியை வழங்கி அதற்கான அறிவூட்டலுக்காக உரிய நிபுணர்களின் சேவையைப் பெற்றுக் கொடுப்பதுடன் சரியாக முறைமைகள் அந்தக் குடும்பத்தால் பேணப்படுகிறதா என்பதை நிறுவனத்தின் தொண்டர்கள் கண்காணிப்பர். அத்துடன் உதவிகளெவையும் துர்ப்பிரயோகம் செய்யப்படாமலிருப்பதையும் நாம் உறுதிப்படுத்திக் கொள்கின்றோம்.

**கேள்வி:** துர்ப்பிரயோகமென்றால் அது எவ்வாறு நிகழ வாய்ப்பிருக்கும்?
**பதில்:** உதாரணமாக ஏதாவது மருத்துவச் செலவுக்காக அல்லது ஒழுகுகின்ற வீட்டுக் கூரையைச் சீரமைக்கும் செலவுக்காக, உடனடி உணவுத் தேவைக்காகக் கூட கோழிகளில் ஒன்றிரண்டையோ அல்லது முழுவதையுமோ விற்றுவிடும் நிர்ப்பந்தத்துக்கு அவர்கள் உள்ளாகலாம். அவ்வாறு நிகழாமல் தடுக்க வேண்டிய அவசியமும் உண்டல்லவா?

**கேள்வி:** அவ்வாறான இக்கட்டான சந்தர்ப்பங்களில் தங்கள் நிறுவனம் எவ்வாறாகச் செயற்படுகிறது?
**பதில்:** அவர்களுடைய உடனடித் தேவைகளை எம்மால் நிவர்த்தி செய்ய முடியுமெனில் அந்தப் பொறுப்பை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். எமக்கு அப்பாற்பட்ட விடயமெனில் அவற்றைக் கையாளக்கூடிய தரப்புகளுடன் தொடர்பு கொண்டு நிவாரணத்தைப் பெற்றுக் கொடுக்கின்றோம். இப்படி நாம் அந்த மக்களுடன் தொடர்ச்சியாகப் பழகுவதால் எம்மால் அவர்களுடன் ஆரோக்கியமான உறவு நிலையைப் பேண முடிகிறது. இதனால் அவர்களை எம்மால் நல்ல செல்நெறியில் வழிநடாத்த முடிகிறது.

**கேள்வி:** உண்மையில் இது பாராட்டக்கூடிய அம்சம் தான். தங்கள் நிறுவனம் எவ்வாறான சேவைகளை ஆற்றி வருகிறது?
**பதில்:** எமது முதல் இலக்கு பின்னடைந்திருக்கும் தமிழ் மக்களின் பொதுக் கல்வித் தரத்தை மீண்டும் பழைய நிலைக்கு உயர்த்துவதும் தொடர்ந்து சர்வதேச வளர்ச்சிப் போக்கில் சேர்ந்து சமாந்தரமாக ஓடக்கூடிய வளர்ச்சி நிலையை உருவாக்குவதுமாகும். பின்தங்கிய கிராமங்களை இனம்கண்டு அங்கெல்லாம் மாலை நேர வகுப்புகளை நடாத்தி வருகின்றோம். அதற்கான ஆசிரியர் வேதனம், கற்றல் உபகரணங்கள் என்பவற்றையும் வழங்கும் அதே நேரத்தில் கட்டிட, தளபாடக் குறைபாடுகளேதும் இருப்பின் அவற்றையும் நிறைவு செய்கின்றொம். சகல சிறார்களுக்கும் கற்றல் மீதான ஆர்வத்தை ஏற்படுத்திச் சிறந்த மனித சமுதாயம் ஓன்றை உருவாக்குவதே இதன் நோக்கம். அதற்கு இடையூறாக இருக்கும் வறுமை, பண்பாட்டுச் சீர்கேடுகள், வாழ்விடப் பிரச்சனைகள், குடும்ப அமைதியின்மை, உளவியற் பிரச்சனைகள் போன்றவற்றையும் கையாளுகின்றோம்.

**கேள்வி:** பண்பாட்டு சீரழிவு பற்றிக் குறிப்பிட்டிருந்தீர்கள். அவற்றை எவ்வாறு கையாளுகின்றீர்கள்?
**பதில்:** இங்கு இளவயது மற்றும் திருமணத்திற்கு முன்னான கர்ப்பம், போதைப்பொருள் பாவனை, சமூக வன்முறைகள் என்பன என்றுமில்லாதளவு இன்று கவலை தரும் அளவில் பெருகி வருவதை நீங்கள் அறியாமல் இருக்க மாட்டீர்கள் என நம்புகின்றேன்.

இவற்றுக்குக் காரணிகளாக அறியாமை, உளவியற் தாக்கங்கள், ஆதரவின்மை போன்ற பலவற்றை ஆய்வுகளூடாக நாம் அடையாளம் கண்டிருக்கின்றோம். அவற்றைக் களையும் செயற்பாடுகளுக்கு நாம் முக்கியத்துவம் கொடுக்கின்றோம்.
பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணத்தைப் பெற்றுக் கொடுப்பதிலும் ஈடுபாடு காட்டி வருகின்றோம். இலவச சட்ட ஆலோசனை, இலவச சட்ட உதவி, இலவச வைத்திய உதவி, உள ஆற்றுகைப்படுத்தல்கள், தொழிற்பயிற்சி மையங்களை உருவாக்கல், விளையாட்டு மற்றும் கலை ஈடுபாடுகளை ஏற்படுத்துதல் போன்ற இன்னும் பலவற்றைச் செய்து வருகின்றோம்.

**கேள்வி:** இன்றைய காலகட்டத்தில் இங்கு அபிவிருத்திகள் பல செய்யப்படுகின்றன தானே?
**பதில்:** ஆம்! அவசியமானதும் கூட. ஆனால் இது எந்தளவுக்கு தனிமனித வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியுள்ளது என்ற கேள்வி இங்கு எழுகின்றது. வீதி அபிவிருத்தியும், கட்டுமான விருத்தியும்,தொழினுட்ப முன்னேற்றங்களும் சாதாரண மனிதர்கள் வாழ்வியலில் முன்னேற்றத்தை ஏற்படுத்திவிட்டதா? இவை எந்தளவிற்கு அவர்களில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன எனக்கேட்டால் பதில் மேலும் புதிய தேவைகளையும் அதனால் மேலும் சுமைகளையும் ஏற்படுத்தியுள்ளன என்பதாகவே இருக்கின்றது. இந்த அபிவிருத்திகள் நிர்வாக, வர்த்தகத் துறைகளை வலுப்படுத்தியுள்ளன. அவை சார்ந்தோரை வளப்படுத்தியுள்ளன. ஆனால் சாதாரணப் பொது மகன் மேலும் அன்றாட வாழ்க்கைக்கே போராடிக்கொண்டிருக்கின்றான். எம்மைப் பொறுத்தளவில அபிவிருத்தியென்பதை தனிமனிதனிலிருந்து ஆரம்பிக்க வேண்டும் எனக் கருதுகின்றோம். அது மட்டுமல்ல அது கிராம மட்டத்திலிருந்து ஆரம்பித்து நகரங்களை நோக்கித் துரிதமாக நகர வேண்டும். அதுவே உண்மையானதும் உறுதியானதுமான அபிவிருத்தியாக இருக்கும். இந்த இலக்கை நோக்கியதாகவே எமது நிறுவனத்தின் செயற்பாடுகளைக் கட்டமைத்துள்ளோம்.

**கேள்வி:** அரசசார்பற்றத் தொண்டு நிறுவனங்கள் இங்கு செயற்படுவதில் பலத்த தடைகளைச் சந்திக்க நேர்வதாக கூறப்படுகிறதே. தங்கள் அனுபவம் எப்படி?
**பதில்:** தடைகள் எனப்படும்போது அவை தாண்டுவதற்கானவை என்பதை நாம் முதலிற் புரிந்து கொள்ள வேண்டும். சரியோ பிழையோ இங்கு ஒரு நடைமுறை யதார்த்தம் இருப்பதையும் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அந்த யதார்த்தத்தை எம்மைப் போன்ற நிறுவனங்களால் உடனடியாக மாற்ற முடியாது என்பதனையும் நாம் விளங்கி வைத்திருக்கின்றோம். ஆனால் அதற்காகச் செய்ய வேண்டியவற்றைச் செய்யாமல் இருக்கவும் முடியாது. தடைகளைக் காரணம் காட்டித் தப்பிக்கவும் கூடாது. அதற்காக வாளெடுத்துப் போர் புரியும் நிலையிலும் நாமில்லை. இந்தக் காரணங்களுக்காகவே நாங்கள் சார்பு நிலை அடையாளப்படுத்தல்களைத் தவிர்த்து வருகின்றோம். விசேடமாக அரசியற் சார்பு நிலை அடையாளப்படுத்தல் களை. எமது நிறுவனத்தில் பல்வேறு அரசியல் சார்புள்ளோர் இருக்கின்றனர். ஆனால் எல்லோருமே ஒரு நிலைப்பாட்டில் தெளிவாக இருக்கின்றோம். அது தான் எமது மக்களின் விமோசனம். இதில் உறுதியாக இருப்பதால் அவரவது அரசியற்சார்பு நிலைகளை வெளியே வைத்து விட்டு மக்கள் நலன் சார்ந்து எம்மால் வெற்றிகரமாக பணியாற்ற முடிகிறது. தடங்கல்களை ஏற்படுத்துவதறகு சில அச்சங்களும் காரணம்.

எனவே அதற்கான தரப்புகளுடன் நட்புகளை ஏற்படுத்தி நாம் அச்சுறுத்தல்களுக்கு உரியவர்களல்ல என்று தெளிவை ஏற்படுத்தி அவர்களுடைய ஒத்தாசையோடு எமது பணிகளைக் கொண்டு செல்ல முடிகிறது. முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய்ப் பிரதேசத்தில் மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்ட காலத்தில் அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள், உதவி வழங்கும் நிறுவனங்கள் உட்பட்ட வெளியார்களெவரும் இலகுவில் அந்த மக்களை அணுக முடியாதிருந்த சூழ்நிலையில் எமது அணுகுமுறை காரணமாக அங்கு சென்று அந்த மக்களுக்குத் தொடர்ச்சியாக சேவையாற்ற எம்மால் முடிந்திருக்கிறது. அங்குள்ள சிறுவர் உட்பட்ட பலரை இலங்கையின் தென்பகுதிக்குச் சுற்றுலா கூட அழைத்துச் செல்ல எம்மால் முடிந்தது. அரசியல் அபிலாசைகளுக்கு அப்பால் எமது மக்கட் சமுதாயத்தின் வலுவான எதிர்காலம் முக்கியமானது.

**கேள்வி:** இறுதியாக என்ன கூற விரும்புகின்றீர்கள்?
**பதில்:** இன்றைய காலகட்டம் மிக முக்கியமானது. தனியொரு நபராலோ தனியொரு நிறுவனத்தாலோ எமது மக்களின் வாழ்க்கையை மீட்டெடுக்க முடியாது. சகல தரப்பும் தமது வேற்றுமைகளை மறந்து மக்களுக்காக ஒன்றிணைந்து சிறந்த ஒரு வேலைத்திட்டத்தின் அடிப்படையில் உழைக்க வேண்டிய தருணமிது. இதில் புலம்பெயர் தமிழரும் அடக்கம். இங்கு தேவைகள் மிக அதிகம். விரைந்து செயற்பட வேண்டும். காலத்தைத் தவறவிட்டால் பின்னர் எல்லோரும் வருந்த வேண்டி ஏற்படும். இணைந்து செயற்பட ருசு குசநைனெ குழரனெயவழைெ இரு கை நீட்டி அழைக்கிறது. தடங்கல்களை எதிர் கொள்வது எமது நிறுவனத்தின் பொறுப்பு. செயற்படுவோமா?

# ஐ.நா.வின் இரகசிய அறிக்கையில் முக்கிய பகுதிகள் கறுப்பு மையினால் அழிப்பு

இலங்கையில் 2009ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் இரகசிய அறிக்கையில் பல பகுதிகள் கறுப்பு மையினால் அழிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

பிபிசிக்கு கசிந்ததாகக் கூறப்படும், இறுதிக்கட்ட யுத்தத்தின் போது தமிழர்களைப் பாதுகாக்க ஐ.நா தவறியமை தொடர்பான அறிக்கையை, ஐ.நா பொதுச் செயலாளர் பான் கீ மூன் நேற்று முன்தினம் பகிரங்கமாக வெளியிட்டுள்ளார்.

128 பக்கங்களைக் கொண்ட இந்த இரகசிய அறிக்கையில், பல பகுதிகள் கறுப்பு மையினால் அழிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், யுத்தத்தின் போது தமிழர்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள், ஐ.நா. தனது பொறுப்பிலிருந்து தவறியமை குறித்த விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மேலும், யுத்த வலயத்தில் சிக்குண்ட பொதுமக்களைப் பாதுகாக்க ஐ.நாவின் உயர்மட்ட அதிகாரிகள் தலையிடவில்லை என்பன குறித்த தகவல்களையும் ஐ.நா வெளியிடவில்லை.

## மத்திய தர வருமானம் ஈட்டும் நாடாக இலங்கை

மத்திய தர வருமானம் ஈட்டும் நாடாக இலங்கை முன்னேறியுள்ளதென்று உலக வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கை குறைந்த வருமானம் ஈட்டும் நாடுகளின் வரிசையிலிருந்து மத்திய தர வருமானம் ஈட்டும் நாடாக முன்னேறியுள்ளதாகத் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயமொன்றை உலக வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் முல்யானி இன்ட்ராவதி மேற்கொள்ளவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாகத் தனியார் முதலீடுகளை மேம்படுத்தல் தொடர்பில் இன்ட்ராவதி கவனம் செலுத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

உலக வங்கியின் மூன்று முகாமைத்துவப் பணிப்பாளர்களில் ஒருவராக இன்ட்ராவதி கடமையாற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அருட்தந்தை லக்ஸ்மன் அடிகளார் வாகன விபத்தில் மரணம்

யாழ்.மறைமாவட்டத்தைச் சேர்ந்த இளங்குருவான அருட்தந்தை கிதபொங்கலன் லக்ஸ்மன் அடிகளார் நேற்றுமுன்தினம் தாளையடியில் வாகன விபத்தில் அகாலமரணமடைந்துள்ளார்.

எழுவை தீவின் முதற்குருவாகத் தெரிவுசெய்யப்பட்ட அடிகளார், யாழ்.மரியன்னை பேராலயம், முல்லைத்தீவு போன்ற இடங்களில் தனது பணிகளை மேற்கொண்டார்.

அவரின் நல்லடக்க நிகழ்வு இன்று மாலை 4 மணிக்கு யாழ்.மரியன்னை பேராலயத்தில் யாழ்.மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் இடம்பெறவுள்ளது.

## சீனாவின் புதிய அதிபர் ஜின்பிங் மார்ச் மாதம் பதவி ஏற்கிறார்

சீனாவின் புதிய அதிபராக ஜீ ஜின்பிங் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார். மார்ச் மாதம் அவர் பதவி ஏற்கிறார். புதிய பிரதமராக லி கெக்யாங்கும் தேர்வு பெற்றார்.

**ஆட்சி மாற்றம்**

சீனாவின் அதிபராக கடந்த 10 ஆண்டுகளாக பதவி வகித்து வருபவர் ஹூ ஜிண்டாவோ. எனவே ஆட்சி அதிகாரத்தில் மாற்றம் செய்ய ஆளும் கம்யூனிஸ்டு கட்சி தீர்மானித்தது. இதற்காக கம்யூனிஸ்டு கட்சியின் உயர்நிலை குழு கூட்டம் பீஜிங்கில் 8-ஆம் திகதி தொடங்கியது. இதில் நாடு முழுவதும் இருந்து வந்திருந்த 2,307 பிரதிநிதிகள் பங்கேற்றார்கள். அதில் ஆட்சி பீடத்தில் புதிய இளைய தலைமுறை தலைவர்களை அமரச் செய்வது என்று தீர்மானிக்கப்பட்டது.

**ஒரு மனதாகத் தேர்வு**



இதன் நிறைவு கூட்டம் நடைபெற்ற போது அதிபர் ஹூ ஜிண்டாவோ தானும், பிரதமர் வென் ஜியாபாவோவும் பதவி விலகுவதாக அறிவித்தார். மேலும் அவர் பேசுகையில், "கட்சியின் மத்திய கமிட்டிக்கு முதிய தலைவர்களுக்கு பதிலாக புதிய இளைய தலைமுறையினர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்" என அறிவித்தார். இதனை அடுத்து கட்சியின் மத்திய கமிட்டிக்கு ஜீ ஜின்பிங் (புதிய அதிபர்), லி கெக்யாங் (புதிய பிரதமர்) ஆகியோரும் பெண் தலைவரான லூ யாங் டோங் (67) உள்பட புதிய உறுப்பினர்கள் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர். இவர்கள் கட்சி மற்றும் ஆட்சியை வரும் 5 ஆண்டுகளுக்கு வழி நடத்துவார்கள்.

அடுத்த கட்டமாக 25 உறுப்பினர்களை கொண்ட போலிட்பீரோ இன்று கூடி புதிய அதிபர், பிரதமர் ஆகியோரை முறைப்படி தேர்வு செய்யப்படுவார்கள். அதன் பிறகு அதிபர் ஹூ ஜிண்டாவோ, பிரதமர் வென் ஜியாபாவோ ஆகியோர் இன்று முதல் கட்சி பொறுப்புகளில் இருந்து விலகி விடுவார்கள்.மார்ச் மாதம் பதவி ஏற்பு புதிய அதிபர் ஜீ ஜின்பிங், பிரதமர் லி கெக்யாங் ஆகியோர் அடுத்த ஆண்டு (2013) மார்ச் மாதம் பதவி ஏற்பார்கள். அது வரையில் ஹூ ஜிண்டாவோ அதிபர் பதவியில் மட்டும் நீடிப்பார்.

## திடீர் மரண விசாரணையாளர் நியமனம்



யாழ். மாவட்டத்திற்கான திடீர் மரண விசாரணையாளராக ஜேக்கப் கிறிஸ்தோப்பர் நியமனம் பெற்றுள்ளார்.

இவர் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் அண்மையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவரான ஜேக்கப் கிறிஸ்தோப்பர் இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனத்தின் ஓய்வுநிலை உத்தியோகத்தராவார். 1992 - 1997 ஆண்டு காலப் பகுதியில் மல்வத்தை திருக்குடும்ப ஆலயத்தின் வலயப் பங்குத் தலைவராகச் சிறப்புப் பணியாற்றியிருக்கிறார். இவர் அகில இலங்கை சமாதான நீதிபதியுமாவார். (க)

## சீனக் கண்காட்சியில் கோதபாய ராஜபக்ஷ

சீனாவின் ஒன்பதாவது சர்வதேச விமான மற்றும் வான்வெளி கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வில் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்திச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

இக்கண்காட்சியானது தென் சீனாவின் கொன்டோங் மாகாணத்தின் சவ்ஹியில் கடந்த பதின்மூன்றாம் திகதி இடம்பெற்றது. இக்கண்காட்சியானது எதிர்வரும் நவம்பர் 18 ஆம் திகதி-வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.


## இலங்கையில் 50 வீதமானவர்களுக்கு நீரிழிவு நோய் தாக்கும் அபாயம்!

நீரழிவு நோயினை கட்டுப்பாட்டிற்கு கொண்டுவராதுவிடின் 2050 ஆம் ஆண்டளவில் இலங்கையின் சனத்தொகையில் 50 சதவீதமானவர்கள் நீரிழிவு நோயினால் பாதிக்கப்படுவர் என சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

பாடசாலை மாணவர்களில் 10-15 சதவீதமான மாணவர்கள் நீரிழிவு நோயின் தாக்கத்திற்கு உட்பட்டுள்ளதாகவும் அமைச்சு எச்சரித்துள்ளது.

இதேவேளை பாடசாலை மாணவர்களில் நான்கு சதவீதமானவர்கள் அதிகளவான உடற்பருமனை கொண்டிருப்பதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

நாட்டின் பல பாகங்களிலுமுள்ள வைத்தியசாலைகளில் நாள் ஒன்றிற்கு 200 இற்கும் அதிகமான மக்கள் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சைக்காக வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.



சுன்னாகம், சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள விழிப்புலன் வலுவிழந்தோருக்கான வாழ்வகம் இல்லத்தில் புதிதாக அமைக்கப்பட்ட அரங்கத்தை அண்மையில் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் திறந்து வைத்தார்.
இந்த அரங்கத்தின் முகப்புத் தோற்றத்தையும், திறப்பு விழா நிகழ்வையும், நிகழ்வில் சிறப்பு அம்சமாக இடம்பெற்ற வாழ்வகப் பிள்ளைகளின் கலைநிகழ்ச்சியையும் இங்கு காணலாம்.

## இன்று கந்தசஷ்டி மூன்றாவது நாள்

# உலகம் உய்வதற்கு அவதரித்த திருமுருகன்



கலியுகத்திலே கண்கண்ட தெய்வம் முருகன். சிவபெருமான் தன் அடியவர்களின் குறையைத் தீர்ப்பதற்காக முருகப்பெருமானை அவதரிக்கச் செய்தார். சிவபெருமானுக்கு ஈசானம், தற்புருசம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் எனும் ஐந்து முகங்கள் காணப்படுகின்றன. இவ்வைந்து முகங்களோடு உமையம்மையின் முகமாகிய அதோமுகத்தையும் இணைத்து ஆறுமுகசுவாமியாக முருகனைத் தோற்றுவித்தார்.

சிவபெருமானது வலது கண் சூரியன், இடது கண் சந்திரன். அதேபோன்று நெற்றியிலே காணப்படுகின்ற மூன்றாவது கண் அக்கினிக் கண்ணாகும். நெற்றிக் கண்ணிலிருந்தும் ஆறு தீப்பொறிகள் உருவாகி சரவணப்பொய்கையில் தாமரை மலர்களில் ஆறு குழந்தைகளாக முருகன் உதித்தான். இதனையே கந்தபுராணம் பின்வரும் பாடலூடாகக் கூறுகிறது.

*"அருவமும் உருவமாகி*
*அநாதி யாய்ப் பலவாய் ஒன்றாய்ப்*
*பிரமமாய் நின்றசோதிப்*
*பிளம்ப தோர் மேனியாகிக்*
*கருணைகூர் முகங்கள் ஆறும்*
*கரங்கள் பன்னிரண்டும் கொண்டு*
*ஒருதிரு முருகன் வந்து ஆங்கு*
*உதித் தனன் உலகம் உய்ய!"*

உலகத்தை உய்விக்க வருகைதந்த முருகன் ஞானமே வடிவானவர் என்பதைக் காட்ட பிரமனை குட்டிச் சிறையிருத்தியமையும் தந்தைக்கு பிரணவமந்திரப், பொருளுபதேசம் செய்து சுவாமி நாதனாகியமையும் திருவிளையாடல்களாகும்.

ஆன்மா அறியாமையினாலேயே உலகியல் இன்பங்களை நாடி துன்பப்படுகிறது. அறியாமை நீங்கினால் பேரின்பப் பெருவாழ்வு வாழலாம் என்பதை கந்தபுராணம் நன்கு விளக்குகின்றது. கந்தபுராணமோ சைவசித்தாந்த சாஸ்திரத்திற்கு இலக்கணமாகத் திகழ்கிறது. முருகன் பதி, வள்ளி தெய்வயானை சுத்த ஆன்மாக்கள், சூரன் ஆணவமலம், சிங்கமுகன் கன்மமலம், தாரகன் மாயாமலம், வேல் ஞானாசக்தியாகும்.ஒருவன் சைவசமயியாக வாழுங்காலத்தில் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவற்றைக் கடைப்பிடிக்கும் போது முதலில் மாயாமலம் நீங்கிக் கொள்ளும். இதனையே கந்தபுராணம் முதலில் முருகப்பெருமான் கிரவுஞ்சமலையை அழித்து அதனோடு தாரகாசுரனையும் அழித்தமையை எடுத்துக் காட்டுகின்றது. மாயை நீங்குவதே ஒரு விடுதலையாகும். தேவர்கள் சிறை மீண்டார்கள் என்பது சான்றாகின்றது.

அடுத்து நீங்குவது கன்மம். சிங்கமுகன் கன்மத்தின் வடிவமானவன். கன்மத்திடம் நல்ல பண்புகளும் உண்டு. தீய பண்புகளும் உண்டு. சிங்கமுகாசுரன் தன் அண்ணன் சூரபன்மனுக்கு நல்ல புத்திமதிகளைச் சொல்கிறான். முருகப்பிரான் பாலன் அல்ல, அவன் சிவபெருமானே என்றும் காண்கின்றான். ஆனால் பின்னர் முருகனோடு போர் செய்து மடிந்து போகின்றான். இது மட்டுமன்றி ஆயிரம் தலைகளையும் இரண்டாயிரம் கைகளையும் உடையவன். அவனது கைகள், தலைகள் முருகனால் வெட்ட வெட்ட மீண்டும் மீண்டும் முளைத்தது என்கிறார் கச்சியப்பர் அதாவது, கன்மம் மறுபிறப்புக்குக் காரணம். மறுபிறப்பு கன்மத்திற்கு காரணம். இதனை சிங்கமுகனிடத்தில் காணலாம்.

சூரன் ஆணவமலம். ஆணவம் என்றும் அழியாது. அழிப்பதும் கடினம். இறுதிவரை ஆன்மாவோடு இருக்கும் என்பதை சூரபன்மனூடாக அறியலாம். முருகப் பெருமானுடைய வில், அம்பு, கத்தி, கதாயுதம், மழு போன்ற ஆயுதங்களால் சூரபன்மனை அழிக்கமுடியவில்லை. ஆணவம் நீங்க வேண்டுமாயின் எம்மிடம் ஞானம் பிரகாசிக்க வேண்டும். ஞானமாகிய வேல் சூரனின் மார்பில் பட்டதும் ஆணவம் வலிமைகுன்றியது போல, அவனது உடலில் இருந்த இரு உயிர்களும் வெளிப்பட்டதல்லவா.

முருகப் பெருமான் பதியாகிய சிவனாகவும் அவனது கைவேல் ஞானாசக்தியாகவும், வேல் சூரன் மார்பில் பட்டமை சத்திநிபாதமாகவும் கொள்ளுதல் வேண்டும். எனவேதான் ஆணவம் நீங்கிய சூரபதுமன் இரு பறவைகளாக முருகனது பாதத்திற்கு வந்த வேளை முருகன் சேவலதும் மயிலதும் உடல்களைக் கொடுத்து தனதடியில் இருந்து நித்திய இன்பத்தைப் பெறும் முத்தியை அளித்தார் என்பது புராண வரலாறு.

*- சைவப் புலவர் செ.கந்த சத்தியதாசன்.*

# சமய தீபம்

## சிந்தனை விருந்து

### இறைவனின் ஆதரவு

மனிதன் அனுபவிக்கும் ஒவ்வொரு உணர்வும் அவனது மனதைப் பொறுத்துதான் அமைகிறது. பணம் நிறைந்த ஒருவனது மனம், தான் ஏழையாக இருப்பதாகவும், இப்போது இருப்பதில் திருப்தி இல்லை என்றும் எண்ணினால், இல்லாதவனைப் போலவே அவன் தன்னை உணர்வான். ஆகவே, மனதை எப்போதும் திருப்தி உணர்வு கொண்டதாக வைத்திருங்கள்.

ஒருவன் மற்றொருவனால் ஏமாற்றப்படும்போது மனம் உடைகிறான். அப்போது ஆறுதல் சொல்ல யாரும் இல்லாவிட்டால், தனக்கு உதவிக்கு யாரும் இல்லையே என்று எண்ணி வருந்துகிறான். இது சரியான எண்ணமல்ல. ஏனெனில் உலகில் ஆதரவற்றவர்கள் என்று யாருமே இல்லை. ஒவ்வொருவருக்கும் இறைவன் ஆதரவு தருபவனாகவே இருக்கிறான். உங்களை யார் கைவிட்டாலும் அவன் நிச்சயமாக கைவிடமாட்டான்.


மனிதர்கள் இறைவனின் வடிவங்களே. அவர்கள் யாராலும் வெற்றிகொள்ள முடியாத அளவிற்கு திறமையுடையவர்களாக இருக்கின்றனர். எனவே பெரிய தோல்வி வந்தால்கூட அதற்காக கலங்காதீர்கள். ஏனெனில் நீங்கள் வெற்றிபெற வேண்டும் என்பதில் உங்களைவிட இறைவன் தான் அதிக ஆர்வமுள்ளவனாக இருக்கிறான்.

*- யோகானந்தர்.*

## இம்மாதத்தில்....

### திருக்கார்த்திகை

இம்மாதம் 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திருக்கார்த்திகை விரத நாளாகும். அன்றைய தினமே குமாராலய தீபமாகும். மறுநாள் 28ஆம் திகதியன்று சர்வாலய தீபம் (வீடுகளில் தீபம்), விஷ்ணுவாலய தீபம் என்பன நிகழ்கின்றன.



# இவ்வார சமய நிகழ்வுகள்

***இந்துக்களுக்குரிய விசேட தினங்கள்***

16.11.2012 வெள்ளி: கார்த்திகை மாதப் பிறப்பு
17.11.2012 சனி: சதுர்த்தி விரதம்
18.11.2012 ஞாயிறு: ஸ்கந்த பஞ்சமி
19.11.2012 திங்கள்: கந்தசஷ்டி விரதம் நிறைவு/ சூரசம்ஹாரம் கார்த்திகை சோமவாரம்

***கிறிஸ்தவர்களுக்குரிய விசேட தினங்கள்***

21.11.2012 புதன்: புனித மரியாவை காணிக்கையாக அர்ப்பணித்த நினைவு நாள்
22.11.2012 வியாழன்: புனித சிசிலியா நினைவு நாள்

## கிறிஸ்தவ நற்சிந்தனை

● இளையோரே! இளமைப் பருவம் மகிழ்ச்சியோடிருப்பதற்கே இளமையின் நாட்களில் உள்ளக் களிப்புடன் இருங்கள். மனம் விரும்புவதை செய்யுங்கள், கண்களின் நாட்டத்தை நிறைவேற்றுங்கள். ஆனால் நீங்கள் செய்கின்ற ஒவ்வொரு செயலுக்கும் உரிய தீர்ப்பை கடவுள் வழங்குவார் என்பதை மறவாதீர்கள்.

(சபை உரை:12, வச:9)

● அறிவாற்றல் பெற்றவர்கள் ஞானம் நிறைந்த பேச்சைக் கேட்டுப் புகழ்வர், அது வளம் பெறச்செய்வர். அப்பேச்சை ஒழுக்கம் கெட்டோர் கேட்க நேரிட்டால் அதை விரும்புவதில்லை, அதை உள்ளத்திலிருந்து விரட்டுவர். (சீரா. அதி:22, வச: 15)

***தொகுப்பு: ரிஷானி அலோசியஸ்***

## இஸ்லாமிய நற்சிந்தனை

● உமது இறைவனின் பாதையின்பால் அறிவு ஞானத்துடனும் அழகிய உபதேசத்தின் மூலமும் அழைப்பு விடுப்பீராக! அவர்களுடன் மிகவும் அழகிய வழிமுறையிலேயே கருத்துப் பரிமாறுவீராக!

● நீங்கள் நல்ல, இறைபக்திக்குரிய விடயங்களில் பரஸ்பரம் ஒத்துழைத்துக் கொள்ளுங்கள். பாவமான அத்துமீறும் விடயங்களில் பரஸ்பரம் ஒத்துழைக்காதீர்கள்!

# கார்த்திகை சோமவாரம்



சோமவாரம் என்பது திங்கட் கிழமையைக் குறிக்கும். கார்த்திகை மாத முதற் சோமவாரம் தொடக்கம் வாரந்தோறும் சிவபெருமானைக் குறித்து அநுட்டிக்கும் விரதம் சோமவாரம் எனப்படும். இவ் விரதத்தினை உபவாசம் இருந்து அநுட்டித்தல் நல்லது. அது இயலாதவர்கள் இரவிலே ஒருபொழுது உண்டு சிவ வழிபாட்டிலே கழித்தல் விரும்பத்தக்கது.

சோமவார விரதத்தினை வாழ்நாள் முழுவதுமாயினும், பன்னிரண்டு வருடங்களாயினும், மூன்று வருட காலமாயினும் ஒரு வருட காலமாயினும் அநுட்டித்தல் வேண்டும். பன்னிரண்டு வருடம் அநுட்டிக்க வாய்ப்பில்லாதவர்கள் ஆண்டுதோறும் கார்த்திகைச் சோம வாரங்களிலே முறைப்படி விரதம் அநுட்டிக்கலாம். கார்த்திகை சோமவார நாளில் உபவாசமிருந்து இரவில் சிவனைப் பூஜிப்பதே இந்த விரதத்தின் சிறப்பாகும். சகலவிதமான நன்மைகளையும் கொடுக்கும் விரதம் இது. சோமன் என்பது உமையுடன் சேர்ந்த சிவன் என்றும் பொருள் உண்டு. இத்தினத்தில் விரதமிருந்து சிவனைப் பூஜிப்போரது பிரம்மஹத்தி முதலிய சகல பாவங்களும் தோஷங்களும் அகலும்.

# பக்தியின் பரிமாணம்

இறைவன் மீது கொள்கின்ற அன்புப் பெருக்கம், பற்று, பிரியம் தான் பக்தி. அன்பும் பற்றுதலும் இறைவன் மீது எந நேரமும் இடையறாது இருத்தல் வேண்டும். இறைவன் திருநாமங்களின் நினைவிலேயே வாழுதல் வேண்டும். இறைவனின் திருவருட் செயல்களின் சிந்தனையிலேயே மூழ்கியிருத்தல் அவசியமாகும். இறைவனில் அசையாத நம்பிக்கை கொண்டு அவனிடம் எல்லாப் பொறுப்புக்களையும் ஒப்படைத்துவிட்டு இருக்கும்போது, சகல சேமநலன்களையும் சுக துக்கங்களையும் இறைவனே பார்த்துக் கொள்வான். இவ்வாறு இறைவனிடம் கொண்ட பக்தியினால், நடந்து கொள்வது பரிபூரண சரணாகதியாகும். எல்லாம் அவன் செயல் என உணர்தல் பக்திக்கு வித்தாகும்.

மூலமும் முதலுமாக விளங்கும் இறைவன், சக்தியையும் தன்னுள் கொண்டுள்ளான். 'பற்றுக பற்றற்றான் பற்றினை' என்று தமிழ் வேதம் சொல்வதற்கிணங்க, ஏனையவற்றில் பற்று வைக்காது, எவ்வித பற்றுக்களுமற்ற இறைவன் மீது மாத்திரம் எல்லா நேரங்களிலும் பற்றுக் கொண்டிருப்பதான திவ்விய நிலையே பக்தி எனப்படுகிறது.

பக்தி, அன்பு என்னும் பிரேமையை வளர்க்கும். பிரேமையின் விளைவே பக்தியாகும்.

சிலர் முற்பிறவிகளில் செய்த புண்ணியங்கள், நற்கருமங்கள், நற்செயல்களின் பலனாக, வேறெந்த உந்துதலுமின்றி, இயல்பாகவே இறைவனில் பற்றும் பக்தியும் உள்ளவர்களாகத் திகழ்கின்றனர். இந்த வகையில் இறைவன் மீது பக்தி பூண்டுள்ளவர்கள் தாம் செய்யும் அனைத்துக் காரியங்களும் இறைவனின் திரு வருளினால் நிகழ்கின்றன எனக் கருதுவார்கள். இறைவனை விசாரித்து, ஒப்புதல் பெற்று இறைவனுடன் இணைந்து செய்யப்படும் கருமங்கள் யாவும் நல்லனவாயே அமையும்.

***- கலாநிதி குமாரசாமி சுந்தரம்***
***(சைவ நற்சிந்தனைக் களஞ்சியம்)***

# வழிக்குத் துணை வடிவேல்

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்மை குன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனும் நாமங்கள் முன்பு செய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்த தனி
வழிக்குத் துணைவடி வேலுஞ் செங்கோடன் மயூரமுமே!

சேல்பட் டழிந்தது செந்தூர் வயற்பொழில் தேங்கடம்பின்
மால்பட் டழிந்தது பூங்கொடி யார்மனம் மாமயிலோன்
வேல்பட் டழிந்தது வேலையும் சூரனும் வெற்புமவன்
கால்பட் டழிந்ததிங் கென்றலை மேலயன் கையெழுத்தே!


அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சேலென வேல் தோன்றும் - நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்
முருகா என்று ஓதுவார்முன்!

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற ஈராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகும் செவ்வேள் மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கை வேல் போற்றி போற்றி!

**இவ்வளவு** முட்டாளாக எந்த மிருகமாவது எப்படி இருக்க முடியும் என்பது தனக்குப் புரியவேயில்லை! என்றது ஸ்கவிலர்.

அங்குமிங்கும் குதித்தபடி வாலை ஆட்டிக்கொண்டு "நமது தலைவரையும் அவர் மனப்போக்கையும் இன்னமுமா மிருகங்கள் தெரிந்து கொள்ளாதிருக்கின்றன? நமது தலைவர் தோழர் நெப்போலியன், அப்படியும் நடக்க விட்டுவிடுவாரா என்ன? ஆனால் அந்தத் தப்பபிப் பிராயத்தைச் சுலபமாகவே போக்கிவிட முடியும். அந்த வண்டி முதலில் ஒரு குதிரை கொல்லியின் வண்டியாக இருந்தது உண்மைதான். அதை வாங்கிய மிருக வைத்தியருக்கு பழைய பெயரை அழித்துவிட்டுப் புதுப் பெயரை எழுத சௌகரியப்படவில்லை. ஆகவேதான் மிருக வைத்தியரின் வண்டியை அறிவில்லாத மிருகங்கள் குதிரை கொல்லியின் வண்டி என்று எண்ணிக் கூக்குரலிட ஆரம்பித்துவிட்டன" என்றது ஸ்க்வீலர்.

இதைக் கேட்டதும் மிகவும் அனுதாபமடைந்த மிருகங்களெல்லாம். ஸ்க்வீலர் தொடர்ந்து பாக்ஸரின் கடைசி நிமி'ங்களைப் பற்றி உருக்கமாக விவரிக்கத் தொடங்கிவிடவே, விலங்குகளுக்கு கொஞ்ச நஞ்சம் இருந்த சந்தேகங்களும் மறைந்துவிட்டன. எவ்வளவு கவனத்துடன் டாக்டர்கள் நமது பாக்ஸரைக் கவனித்துக் கொண்டார்




கள் என்பதையும் விலையுயர்ந்த மருந்துகளை நெப்போலியன் உத்தரவின் பேரில் செலுத்தினார்கள்

என்பதையும் பற்றி உருக்கமாகப் பேசியது ஸ்க்விலர். எனவே கடைசி சந்தேகங்களும் தீர்ந்து விலங்குகள் துக்கத்திலும் ஒரு திருப்தியடைந்தன. பாக்ஸர் கடைசி

நிமிஷங்களை மிகவும் சௌகரியமாகக் கழித்தது என்கிற நம்பிக்கையில் சிறிது பெருமையும் மன நிறைவும் அடைந்தன.

அடுத்த ஞாயிறன்று காலையில் கொட்டகையில் கூட்டம் கூடிய போது, நெப்போலியனே மேடைமீது தோன்றி, பாக்ஸரின் ஞாபகார்த்தமாக ஒரு சிறிய சொற்பொழிவு நிகழ்த்தியது. பண்ணையிலே புதைக்க அதன் உடலைக் கொண்டுவர முடியவில்லையே என்று வருத்தம் தெரிவித்தது நெப்போலியன். ஆனால், துக்கத்தைக் குறிக்கும் லாரல் இலைகளால் ஒரு அழகான மாலை கட்டச் சொல்லி, அதை பாக்ஸரின் கல்லறையிலே அணிவிக்கச் செய்திருப்பதாகச் சொல்லியது. சில நாட்களுக்குப் பிறகு பாக்ஸரின் ஞாபகார்த்தமாக ஒரு விருந்து நடத்துவது என்று பன்றிகள் தீர்மானித்திருப்பதாகச் சொல்லிற்று நெப்போலியன். பாக் ஸரின் இரண்டு ஸ்லோகங்களை யும் "நான் இன்னும் கடுமையாக வேலை செய்வேன்" என்பதையும். "நெப்போலியன் சொல்லிவட்டால் சரி" என்பதையும் விலங்குகளுக்டிகெல்லாம் கடைசியில் ஞாபக மூட்டியது நெப்போலியன். பாக்ஸரின் ஞாபகார்த்தமாக அது காட்டிய வழியை, அதன் கொள்கைகளை மிருகங்கள் பின்பற்றி நடந்து அதைக் கௌரவிக்க வேண்டும் என்றது நெப்போலியன்.

மிருகங்களுக்கு இந்த இரண்டையும் விடச் சிறந்த ஸ்லோகங்கள் கிடைக்காது என்பது நிச்சயம் என்றது அது. பாக்ஸர் ஞாபகார்த்தமாக பன்றிகள் விருந்து நடத்திய அன்று ஒரு வண்டி வந்து பீப்பாய் ஒன்றை விலங்குப் பண்ணையில் இறங்கியது. பன்றிகள் மிகவும் உல்லாசமாக விருந்துண்டு, கூடிக் களித்துப்பாடுவது விலங்குப் பண்ணை முழுவதும் கேட்டது. பாட்டு உச்சஸ்தாயியில் ஏறியது. பின்னர் ஏதோ பலமான சப்தம் கேட்டது.

(திங்கள்...)





தற்போதுள்ள பனி நிறைந்த அண்டார்டிகா பகுதியில் 14 லட்சம் ஆண்டுகளுக்கு முன் உயிரினங்கள் வாழ்ந்ததற்கான அடையாளங்கள் இருப்பதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இதன் மூலம் இப்பகுதியில் ஏற்கெனவே ஒரு "உலகம்" இருந்துள்ளதை விஞ்ஞானிகள் தங்கள் கண்டுபிடிப்பின் மூலம் ஊர்ஜிதம் செய்துள்ளனர். அண்டார்டிகாவின் தொலைதூர மலைப்பகுதிகளில் தாவரங்கள், விலங்கினங்கள் ஆகியவற்றின் கல்லினுள் பதிந்த படிமங்களை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

அமெரிக்காவில் உள்ள வடக்கு டகோடா மாநில பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஆடம் லெவிஸ் தலைமையிலான ஆராய்ச்சியாளர்கள் இந்த அரிய கண்டுபிடிப்பை வெளிப்படுத்தியுள்ளதாக, "தி டெய்லி டெலிகிராப்" செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த 2 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு அண்டார்டிகா பகுதியில் நிலவிய கடுமையான பனிப்பொழிவு மற்றும் சீதோ'ண நிலை காரணமாக உயிரினங்கள் அப்படியே பனியில் மூடிந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

பாதுகாக்கப்பட்ட உயிரினங்கள் பற்றிய ஆராய்ச்சி, எரிமலை சாம்பல்கள் மூலம் கிடைத்த ஆய்வுகள் மூலம் அங்கு பல லட்சம் ஆண்டுகளுக்கு முன் பெரிய பெரிய பனிப்பாறைகள் இருந்ததும் தெரியவந்துள்ளது. அப்பகுதியில் கிடைத்த கடின ஓடுள்ள நீர்வாழ் பிராணியின் படிமங்கள், பாசி வகைகள் ஆகியவற் றின் மூலம் உயிரினங்கள் வாழ்ந்ததற்கான அடையாளம் கண்டறியப்பட்டுள்ளது. சுற்றுச்சூழல் மாசு காரணமாக உலகளாவிய விழிப்புணர்வு தற்போது ஏற்பட்டிருந்தாலும், "பழைய" உலகம் ஒன்று இருந்து அழிந்துபோனதை கருத்தில் கொள்ள இந்த கண்டுபிடிப்பு ஒரு எச்சரிக்கையாக அமைந்துள்ளது.






## பலூன்



பத்துக் காசு விலையிலே
பலூன் ஒன்று வாங்கினேன்
பலூன் ஒன்று வாங்கினேன்
பையப் பைய ஊதினேன்

பையப் பைய ஊதவே
பந்து போல ஆனது
பந்து போல ஆனதும்
பலமாய் நானும் ஊதினேன்

பலமாய் நானும் ஊதவே
பானை போல ஆனது
பானை போல ஆனதை
பார்க்க ஓடி வாருங்கள்

விரைவில் வந்தால்
பார்க்கலாம்
அல்லது வெடிக்கும் சத்தம்
கேட்கலாம்


ஹையா !!! எல்லாரும்
கைதட்டுங்கோ !

ஹெக்கே பெக்கெ ஹெக்கே
பெக்கெ ஹா ஹா ஹா :)

## கப்பலில் வேலை
## முல்லா கதைகள்

முல்லா நஸ்ருதின் கப்பலில் வேலை கேட்டு விண்ணப்பித்து இருந்தார். அவர் நேர்காணலுக்கு அழைக்கப்பட்டார். அவரிடம் நேர்முகத் தேர்வு நடத்தியவர் கேட்டார் "புயல் வருமானால் என்ன செய்வீர்? என்று அவர் சொன்னார் "நங்கூரத்தை நாட்டுவேன்" என்று "முன்னைவிட பெரியதாய் இன்னொரு புயல் வருகிறது அப்போது நீர் என்ன செய்வீர் ?"

"நான் இன்னொரு நங்கூரத்தை நாட்டுவேன்" என்றார் அவர். இப்படி அது சென்று கொண்டு இருந்தது.




"பத்தாவது புயல்!" நஸ்ருதின் சொன்னார் "நான் இன்னொரு நங்கூரத்தை நாட்டுவேன்" அந்த மனிதர் கேட்டார். "ஆனால் இத்தனை நங்கூரத்தை நீர் எங்கிருந்து பெறுவீர்?" என்று அதற்கு நஸ்ருதின் சொன்னார். "தாங்கள் எங்கிருந்து புயல்களை பெறுவீர்களோ அங்கிருந்துதான்"

**சுடோக்கு எண் 96 விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 6 | 4 | 5 | 9 | 8 | 2 | 1 | 7 |
| 2 | 9 | 8 | 1 | 3 | 7 | 6 | 5 | 4 |
| 1 | 7 | 5 | 4 | 6 | 2 | 9 | 8 | 3 |
| 6 | 8 | 2 | 3 | 7 | 5 | 4 | 9 | 1 |
| 5 | 4 | 3 | 8 | 1 | 9 | 7 | 2 | 6 |
| 7 | 1 | 9 | 2 | 4 | 6 | 5 | 3 | 8 |
| 9 | 5 | 1 | 6 | 8 | 4 | 3 | 7 | 2 |
| 8 | 2 | 6 | 7 | 5 | 3 | 1 | 4 | 9 |
| 4 | 3 | 7 | 9 | 2 | 1 | 8 | 6 | 5 |

**சுடோக்கு எண் 97**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 4 | | 3 | | 6 | | | 5 |
| | | | 8 | | | | | 6 |
| | | | | 4 | | 8 | | |
| 3 | 7 | 6 | | | | | 5 | 8 |
| 1 | | 8 | | 6 | | 4 | | 2 |
| 4 | 5 | | | | | 1 | 6 | 7 |
| | | 5 | | 1 | | | | |
| 7 | | | | | 8 | | | |
| 6 | | | 4 | | 2 | | 8 | 1 |





யாழ்ப்பாணம் நகர மத்தியில், ஆஸ்பத்திரி வீதி மற்றும் பலாலி வீதிகளில் தீப விளக்குகளை ஏற்றி இலங்கை இராணுவத்தின் 51ஆவது படைப்பிரிவு, இந்து கலாசார திருநாளான தீபாவளித் திருநாளை கடந்த 13ஆம் திகதி கொண்டாடியது. இந் நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்கவும் சிறப்பு விருந்தினராக யாழ் அரச அதிபரும் மற்றும் அதிகாரிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

# பிளேபாய் PLAYBOY இந்தியாவுக்கும் வருகிறதாம்

பிளேபாய் என்பது விளையாடும் பொம்மைகள் பற்றியது அல்ல. அது ஊதாரித்தனமாக பெண், போதை என கேளிக்கையில் மூழ்கிக் கிடக்கும் "மைனர் குஞ்சு"களை குறிப்பது. இவர்களை குறிவைத்து பிரத்தியேகமாக அமெரிக்காவில் துவங்கப்பட்டவை தான் வரலாற்றுப் புகழ்பெற்ற "பிளேபாய்" புத்தகம், இரவு விடுதிகள், ஓய்வகங்கள் மற்றும் பிராண்ட் பொருட்கள். பாலுணர்வுத் தூண்டல், பெண்களின் அரை - முழு நிர்வாண படங்கள் போன்ற ஆண்களுக்கான பிரத்தியேகமான மூன்றாம் தர பத்திரிகையான பிளேபாய் 1953 முதல் இன்றும் மவுசு குறையாமல் தடை செய்யப்பட்ட சில நாடுகளைத் தவிர உலகத்தின் பல நாடுகளிலும் விற்பனை செய்யப்படுகிறது.

இந்தியாவில் பிளேபாய் பத்திரிகை தடை செய்யப்பட்டிருந்தாலும், அந்நிய முதலீட்டிற்காக நாட்டை ஹோல்சேலில் விற்பனை செய்யும் அரசும், முதலாளிகளும், நிழலை விடுத்து நிஜத்தை அரங்கேற்ற தயாராகியிருக்கின்றனர்.

மனிதகுலத்துக்கான தனது 52 வருட "பணி"யில் உலகம் முழுவதிலும் 44 இரவு விடுதிகளை நடத்தும் பிளேபாயை இந்தியாவில் சந்தைப்படுத்த "பிளேபாய் லைஃப் ஸ்டைல்" என்ற மும்பை நிறுவனம் உரிமம் பெற்றுள்ளது. இந்தியாவின் முதல் பிளேபாய் கிளப் கோவாவின் காண்டோலிம் கடற்கரையில் 22,000 சதுர அடி பரப்பளவில் டிசம்பர் மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது. "அது உலக அளவில் பிளேபாயின் முதல் கடற்கரை கிளப்பாக விளங்கும்" என்கிறார் நிறுவனத்தின் தலைமை நிர்வாகி சஞ்சய் குப்தா. அடுத்த பத்து ஆண்டுகளுக்குள், நாடு முழுவதும் 120க்கும் மேற்பட்ட நைட் கிளப்புகளையும், உணவு விடுதிகளையும், சில்லறை விற்பனைக் கடைகளையும் தொடங்குவதாகஇந்த நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

பிளேபாய் கடைகள் டாஸ்மாக் பார்களை போல மட்டுமின்றி "பிளேபாய் பந்நி (முயல் குட்டி)" என்ற பெயரில் கவர்ச்சியுடையில் மேசைப் பணிப்பெண்களை வைத்து நடத்தப்படுகின்றன. அதற்காக வேலைக்கு அமர்த்தப்படும் பெண்கள் பெயருக்கேற்றபடி பணக்கார பொறுக்கிகளின் விளையாட்டுப் பொம்மைகளாக நடந்து கொள்ள வேண்டியிருக்கும்.

இந்த பிளே பந்நிகளுக்கான கவர்ச்சி உடை பிரத்தியேகமாக உருவாக்கப்பட்டுள்ளது. "கோர செட்"" என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் உள்ளாடை வகையை சாட்டின் போன்ற பளபளக்கும் துணியில் வெளியாடையாக அணிந்துகொண்டு, நெட் துணியால் ஆன காலுறை, சாட்டினால் செய்யப்பட்ட முயலைப் போல நீண்ட காதுகள், பின்புறத்தில் முயலுக்கு இருப்பதைப் போல பருத்தி வால், கழுத்துப் பட்டியின் அணி முடிச்சு உடுத்தி, பெயர் அட்டையை இடுப்பில் தொங்கவிட்டுக்கொண்டு அரை நிர்வாண கோலத்தில் வலம் வர வேண்டும். இந்தச் சீருடை மட்டும் 10,000 டொலர் (சுமார் ரூ 5 லட்சம்) அமெரிக்க டாலருக்கு விற்கப்படுகிறது.

விடுதிக்கு வரும் மேட்டுக் குடி ஆண்களுக்கு மது பரிமாறும் வேலையைச் செய்வது இந்த பெண்களின் கடமை. கதவைத் திறந்து விடுவதிலிருந்து, சிகரெட் பற்ற வைப்பது, ஒவ்வொருவரின் தேவை அறிந்து சேவைகளை செய்வது, நடன கூட்டாளியாக இருப்பது போன்ற பணிகளையும் இந்தப் பணிப்பெண்கள் செய்வார்கள். தவிர பார்ம் ஹவுஸ்களில் நடக்கும் பிரைவேட் பார்ட்டிகளுக்கும் சென்று சேவை செய்ய வேண்டும்.

ஒவ்வொரு விடுதியிலும், இவர்களை மேய்ப்பதற்காகவே பந்நி அன்னை என்பவர் தலைமை வகிப்பார். அவர் வேலை நேரங்களை ஒழுங்கு செய்வது, பணிக்கு அமர்த்துவது, பணிநீக்கம் செய்வது, பயிற்சி தருவது போன்றவற்றை கையாளுவார். "முதலாளித்துவ ஒழுக்கத்தில் அதெல்லாம் கறாராக இருக்கும்" என்று பெருமைப்பட்டுக் கொள்ளலாம்.

அழகு, இனிய குரல், மற்றும் பொறுமை, சகிப்புத்தன்மை போன்ற குணங்கள்தான் இங்கு முக்கியம். இவர்கள் எல்லோருக்கும் பொறுப்பாக இருக்கும் மேனேஜர் தினமும் வேலைக்கு வரும் பணிப்பெண்களின் எடையை நிறுத்துப் பார்க்கவேண்டும். எடை குறைவு அல்லது ஏற்றம் இரண்டும் கம்பெனியின் வரையறையை மீறினால் அவர்கள் உடனே வேலையை விட்டு நீக்கப்படுவார்கள்.

இப்படியாக, பளபளக்கும் விளக்குகள் மாட்டி, ஊழியர்களுக்கு சிறப்பான சீருடை அணிவித்து, பல மடங்கு விலையில் உணவுப் பொருட்களை விற்கும் மெக்டொனால்டு-கே.எப்.சி போன்ற உணவகங்களைப் போல "பிளேபாய்" என்ற பிராண்டுக்கும் தனித்துவம் உருவாக்கப்பட்டுள்ளது.

"ஏற்கனவே பெரு நகரங்களில் உரிமமில்லாத இரவு விடுதிகள் பல போலீஸ் அதிகாரிகளின் "ஸ்பெஷல்" கவனிப்பில் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. அப்படி இருக்கும் போது இதில் என்ன பெரிய அதிசயம்" என்று நீங்கள் நினைக்கக் கூடும். எலியைப்பிடிக்க மசால் வடையை வைப்பது போல இந்திய "அழகிகள்" கிடைக்கும் வரை இறக்குமதி செய்யப்பட்ட பாரின் அழகிகளையல்லவா பணிக்கு அமர்த்தப் போகிறார்கள். "மேட் இன் அமெரிக்கா என்றால் பால்டாயிலையும் கூட "ஆசம் டியூட்" என குடிக்க தயாராக உள்ள கூட்டத்தை நம்பியல்லவா இறங்கியிருக்கிறார்கள்.

மேலும் நிழல் உலகுக்குள் பயந்து போகத் துணியாத டீசன்ட் ஜென்டில்மேன் மற்றும் எக்ஸ்கியூஸ் மீ பார்ட்டிகளெல்லாம் இந்த அரசு அங்கிகாரம் பெற்ற கேளிக்கை விடுதிக்குள் தயங்காமல் செல்லலாமே... இந்த அடிப்படையில் பிளேபாய் கிளப்புகள் இந்திய நடுத்தர வர்க்க பொழுதுபோக்கு உலகை புரட்டிப் போட்டு விடும் என்பதில் சந்தேகமில்லை. இப்போது "கேஎப்சி போய் வருகிறேன்" என்று சொல்வதைப் போல "பிளேபாய் கிளப் போகிறேன்" என்று கௌரவத்துடன் போய் வரலாம்.

"இதனால் இந்தியக் கலாசாரம் சீரழிந்து போகுமே" என்று முண்டா தட்டுபவர்களுக்கு "இந்தியாவில் பந்நிகள் அம்மணக் கட்டையாக வலம் வரமாட்டார்கள் இந்திய கலாச்சார அறங்களை நாங்கள் மதித்து நடப்போம்" என முழுக்க நனைந்திருந்தாலும் முக்காடு உண்டு என்ற உத்தரவாதம் அளிக்கிறார் நிறுவனத்தின் தலைமை நிர்வாகி சஞ்சய் குப்தா. இப்படி இந்து ஞான மரபு சர்டிபிகேட்டையும் வாங்கியதோடல்லாமல், அறத்தின் அறங்காவலராகவும் தன்னை நியமித்துக்கொண்டுள்ளது பிளேபாய்.

இந்த விடுதிகளில் நுழைந்து பார்த்து விட நினைக்கும் கூட்டம் ஏராளமாக இருந்தாலும் பெரும் பணம் இருப்பவனுக்கு மட்டும் தான் அங்கு அனுமதி கிடைக்கும். அனுமதி மறுக்கப்படும் நபர்களின் நுகர்வு வெறியைப்பற்றி கேட்கவும் வேண்டுமா? ஏற்கனவே பைக் வாங்குவதற்காக கொலை, செல்போன் செலவுக்காக கொலை, பார்ட்டிக்காக கொலை, சூதாட்டத்திற்காக கொலை என்று சக மனிதர்களின் உயிரையும் துச்சமாக மதிக்கும் போக்கு மலிந்துள்ள நிலையில் மேலும் இது போன்ற குற்றங்கள் பல்கிப் பெருகும். காணும் பெண்களையெல்லாம் பந்நிகளாக கருதத்துவங்கி ஏற்கனவே அபாய நிலையில் இருகும் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் பல மடங்கு அதிகரிக்கும்.

இந்தச் சூழலில்தான் இந்தியாவில் கால் எடுத்து வைக்கிறான் பிளேபாய். "உங்களில் யார் பிளேபாய் ஆக விரும்புவீர்கள்" என்ற சதவீத கணிப்பை கொண்டு இரத்தின கம்பளத்தை விரித்திருக்கின்றனர். அதன் சமூக விளைவுகளைப் பற்றி அவர்கள் கவலைப்படப் போவதில்லை. பாலியல் உணர்வில் மனிதத் தன்மையை துறந்து வெறும் விலங்குணர்ச்சியாக வெறியேற்றும் ப்ளேபாயின் பாலுறவு விற்பனை தந்திரம் அவர்களைப் பொறுத்த வரை இலாபம் மட்டுமே. ஆனால் நுகர்வுக் கலாசாரத்தின் கோரப்பிடியில் சிக்கி "எல்லாவற்றையும் அனுபவிக்க வேண்டும்" என்ற வெறி மேட்டுக்குடி மட்டு மின்றி மேல்நடுத்தர இளைஞர் களிடமும் பரப்பப்பட்டு வருகி றது. "சமூக மிகுதியின் விளைவே குற்றம்" (Crime is a product of social excess) என்று லெனின் சொன்னது நம் நகரங்களில் இன்று நிஜமாகி வருகிறது.

(நன்றி இணையம்)



# சர்வதேச தலைவர்களுக்கு பராக் ஒபாமா அழைப்பு

அமெரிக்காவுடன் சிறந்த ஒத்துழைப்பை மேற்கொள்ள பல்வேறு நாடுகளின் தலைவர்களுக்கு அந்நாட்டு ஜனாதிபதி பராக் ஒபாமா அழைப்பு விடுத்துள்ளார்.



இதுகுறித்து ஒபாமா கூறுகையில், அமெரிக்காவுடன் சர்வதேச நாடுகள் வைத்திருந்த சிறந்த ஒத்துழைப்புக்கு நன்றி. இதே போன்று நல்லுறவுகளை தொடர விரும்புகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

மேலும் ஆப்கான் ஜனாதிபதி ஹமீது கர்சாய், இத்தாலி பிரதமர் மரியோ மண்டி, ஜோர்டான் அரசர் அப்துல்லா 2, கத்தாரின் அமிர் ஹமத்பின் கலிஃபா அல்-தானி, ரஷிய ஜனாதிபதி விளாதிமிர் புதின், ஸ்பெயின் பிரதமர் மரியானோ ரஜாய் உள்ளிட்டோரிடம் ஒபாமா தொலைபேசியில் பேசியதாக வெள்ளை மாளிகையின் ஊடகச் செயலர் ஜே கார்னே தெரிவித்தார்.

இந்நிலையில் அமெரிக்க துணை ஜனாதிபதி ஜோ பிடன், ஈராக் பிரதமர் நௌரி அல்-மாலிகியிடம் பேசினார். அப்போது இரு நாடுகளுக்கிடையேயான இராணுவ ரீதியிலான ஒத்துழைப்பை மேம்படுத்த இரு நாட்டுத் தலைவர்களும் ஒப்புக் கொண்டதாக வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உலக பார்வை

## பெட்ரய்ஸ் மீதான பாலியல் குற்றச்சாட்டில் விசாரணை நடைபெறுகிறது: ஒபாமா

அமெரிக்க உளவுப் பிரிவான சி.ஐ.ஏ.வின் தலைவராக பணியாற்றியவர் ஜெனரல் பெட்ரய்ஸ்(வயது 60).





இவரது வாழ்க்கை வரலாறு குறித்த புத்தகத்தை எழுதும் பணியில் முன்னாள் இராணுவ பெண் அதிகாரியான பவுலா ப்ராட்வெல் ஈடுபட்டிருந்த போது, இருவருக்கும் தகாத உறவு இருந்ததாக செய்திகள் வெளியாயின.

இதனையடுத்து அவர் தனது பதவியை ராஜினாமா செய்தார். அவரது ராஜினாமாவை ஏற்றுக் கொண்ட அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா வெளியிட்டுள்ள அறிக்கையில், பெட்ரய்ஸ் சி.ஐ.ஏ.வின் தலைவராக இருந்த போது மிகவும் சிறப்பாக செயலாற்றி இந்த நாட்டுக்கு சேவை புரிந்துள்ளார்.

அவருடைய சொந்த மதிப்பீட்டின்படி சி.ஐ.ஏ.வின் தலைவராக நீடிப்பதற்குண்டான தகுதிகள் தனக்கு தற்போது இல்லாததை உணர்ந்துள்ளதால், தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

சி.ஐ.ஏ.வின் தற்காலிக தலைவராக நியமிக்கப்பட்டிருக்கும் ரெக்டர் முல்லர் மற்றும் எப்.பி.ஐ. அதிகாரிகள் பெட்ரெய்ஸ்-பவுலா ப்ராட்வெல் இடையிலான தொடர்பின் மூலம் தேசிய பாதுகாப்பு மீறப்பட்டுள்ளதா? என விசாரித்து வருகிறார்கள். இந்த விசாரணையின் முன் னேற்றம் குறித்து நான் கருத்து கூற விரும்பவில்லை. விசாரணை நடத்துபவர்கள் உண்மைகளை வெளியிடுவார்கள் என்று தெரிவித்துள்ளார்.

# கருக்கலைப்பு செய்ய மருத்துவர்கள் மறுப்பு: பெண் பரிதாபமாக மரணம்

நோயால் பாதிக்கப்பட்டிருந்த பெண்ணுக்கு கருக்கலைப்பு செய்ய டாக்டர்கள் மறுத்ததால், அப்பெண் பரிதாபமாக உயிரிழந்தார்.

இந்தியாவை சேர்ந்த பிரவீன் ஹலப்பான்னாவர் (வயது 36) அயர்லாந்தின் கால்வே நகரில் பூஸ்டன் அறிவியல் ஆராய்ச்சி மையத்தில் விஞ்ஞானியாக பணியாற்றி வருகிறார்.

இவரது மனைவி சவீதா ஹலப்பான்னாவர் (வயது 31) பல் மருத்துவராக பணியாற்றி வருகிறார்.

4 மாத கர்ப்பிணியான சவீதா, இரத்தத்தில் பக்டீரியா அதிகம் உள்ள செப்டிகேமியா என்ற நோயால் அவதிப்பட்டு வந்துள்ளார். கடுமையான வேதனையில் அவதிப்பட்டு வந்த சவீதா, தனது கருவை கலைக்க வேண்டி பல முறை ஹால்வேயில் உள்ள யுனிவர்சிட்டி மருத்துவமனைக்கு சென்றுள்ளார்.

இவ்வாறு கடந்த மாதம் சென்ற போது கரு துடிப்புடன் இருந்தது. ஆனால், கத்தோலிக்க கிறிஸ்தவ நாட்டில் கருக்கலைப்பு செய்ய முடியாது என்று கூறி மருத்துவர்கள் மறுத்து விட்டனர்.


இந்நிலையில் இறந்த நிலையில் கரு அவரின் கர்ப்ப பையிலிருந்து தாமதமாக நீக்கப்பட்டுள்ளது. மேலும் சிகிச்சை பலனில்லாததால் சவீதாவும் இறந்து விட்டார். இதனையடுத்து விசா ரணை நடத்த அரசு உத்தரவிட்டுள்ளது.



ரஷ்ய தலைநகர் மாஸ்கோ வந்துள்ள பிரான்ஸ் முன்னாள் அதிபர் நிகோலஸ் சர்கோசியுடன் உரையாடும் அந்நாட்டு அதிபர் விளாடிமிர் புடின்.

# சூடானில் பரவி வரும் மஞ்சள் காய்ச்சல்: 50 கோடி மக்களுக்கு அச்சுறுத்தல்

சூடானில் பரவி வரும் மஞ்சள் காய்ச்சலுக்கு இதுவரையில் 107 பேர் பலியாகி உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.



சூடானில் உள்ள டார்ஃபர் பகுதியில் பரவி வரும் மஞ்சள் காய்ச்சலுக்கு, கடந்த ஒன்றரை மாதத்தில் மட்டும் 107 பேர் உயிரிழந்துள்ளதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேலும் இந்த நோய் நாடு முழுவதும் பரவ வாய்ப்புள்ளதாகவும் சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது.


கொசுக்களால் பரவி வரும் இந்நோயை கட்டுப்படுத்த உரிய மருந்துகள் அந்நாட்டில் இல்லை. எனினும் தடுப்பு நடவடிக்கைகளில் சூடான் அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

இக்காய்ச்சலால் ஆப்பிரிக்காவில் உள்ள 32 நாடுகளில் வாழும் 50 கோடி மக்களுக்கும் அச்சுறுத்தல் இருப்பதாக உலக சுகாதார நிறுவனம் கூறியுள்ளது.

கடந்த 2005ஆம் ஆண்டு சூடானில் உள்ள தெற்கு கொர்டோபன் பகுதியில் மஞ்சள் காய்ச்சல் தாக்கி 160 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சிரியா அகதிகளுக்கு ரூ.150 கோடி நிதியுதவி: ஹிலாரி கிளிண்டன்

சிரியாவில் ஜனாதிபதி அசாத்துக்கு எதிராக கடந்த 22 மாதங்களுக்கு மேலாக போராட்டம் நடந்து வருகின்றது.



இதனால் நடந்து வரும் உள்நாட்டு போரில் அப்பாவி பொது மக்கள் பலர் பலியாகி வருவதுடன், அகதிகளாக அண்டை நாடுகளில் தஞ்சம் அடைகின்றனர்.

இவர்கள் துருக்கி, ஜோர்டான், லிபியா மற்றும் ஈராக் நாடுகளில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

இந்த மக்களுக்கு அமெரிக்கா, அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகள் நிதி உதவி அளித்து வருகின்றன.

இதற்கிடையில் அவுஸ்திரேலியா சென்றுள்ள அமெரிக்க வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன், இராணுவ அமைச்சர் லியான் பெனட்டா ஆகியோர் நேற்று அவுஸ்திரேலிய அமைச்சர்களை சந்தித்து பேச்சு நடத்தினர்.

இதுகுறித்து ஹிலாரி கிளிண்டன் கூறுகையில், சிரியா உள்நாட்டு போரினால் பாதிக்கப்பட்டு அகதிகளாகிய மக்களுக்காக ரூ.150 கோடி நிதி உதவி வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது சிரியா மட்டுமின்றி அண்டை நாடுகளில் தஞ்சம் அடைந்துள்ள அகதிகளுக்கும் வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

# அறக்கட்டளைக்காக அரை குறை போஸ் கொடுத்த இங்கிலாந்து தீயணைப்பு வீராங்கனைகள்

இங்கிலாந்தில் உள்ள அறக்கட்டளைக்காக பெண் தீயணைப்பு வீராங்கனைகள் சிலர் சேர்ந்து அரை குறையாகவும், கவர்ச்சியாகவும் போஸ் கொடுத்துள்ளனர்.




தெற்கு யார்க்ஷயர் தீயணைப்பு பிரிவைச் சேர்ந்த பெண்களே இவ்வாறு போஸ் கொடுத்துள்ளனர். இதை காலண்டரில் போட்டு, விற்று அந்த பணத்தை அறக்கட்டளைக்கு நன்கொடையாக அளிக்க உள்ளனராம்.

பயர் கேர்ள்ஸ் 2013 என்று பெயரிட்டுள்ள இந்த காலண்டர், தற்போது இ பே மூலம் விற்பனைக்கு வந்து விட்டது. ஒரு காலண்டரின் விலை 6 பவுண்டுகளாகும். இந்தப் பணம் புற்று நோய் அறக்கட்டளைக்கு போக உள்ளதாம்.

இந்த காலண்டருக்கு 23 வயது முதல் 54 வயது வரை பல்வேறு வயதை கொண்ட பெண்கள் போஸ் கொடுத்துள்ளனர்.

முதலில் இப்படி போஸ் தர வெட்கமாக இருந்ததாக கூறியுள்ள சில பெண்கள், ஆனால் நல்ல காரியத்திற்காக தானே இப்படி தர போகிறோம் என்று நினைத்து முழு மனதுடன் போஸ் கொடுத்ததாக சொல்லி உள்ளனர்.

# திரைப்படமாகிறது முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் வாழ்க்கை வரலாறு



மறைந்த முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியின் வாழ்க்கை திரைப்படமாகிறது. பாவ்னா தல்வர் இப்படத்தை இயக்க, ராஜீவ் காந்தியின் இளமைப் பருவ வாழ்க்கை, அரசியல் பிரவேசம், ஸ்ரீபெரும்புதூரில் குண்டு வெடிப்பில் இறந்தது போன்றவை படத்தில் இடம் பெறுகின்றன.

எனவே இப்படத்துக்கு காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தியின் ஒப்புதலை பெற முயற்சிகள் நடக்கிறது. திரைக்கதை முழு விவரமும் அவரிடம் அளிக்கப்பட உள்ளது. இந்தப் படத்தில் ராஜீவ்காந்தி வேடத்தில் நடிக்க அபிஷேக் பச்சனைத் தெரிவு செய்துள்ளனர்.

மேலும் சில ஹாலிவுட் நடிகர்களும் பரிசீலிக்கப்படுகிறார்கள். ராஜீவ் வேடத்தில் நடிக்க தெரிவானவர்களின் பெயர் பட்டியலும் சோனியாவிடம் ஒப்படைக்கப்படுகிறது.

அவர் அதற்கான தெரிவை செய்கிறார். இதில் அபிஷேக் பச்சனுக்கு கூடுதல் வாய்ப்பு இருப்பதாகக் கூறப்படுகிறது.

# துப்பாக்கி படத்துக்கு தடை போட முஸ்லிம் லீக் கோரிக்கை

விஜய் நடித்து வெளியாகியுள்ள, துப்பாக்கி திரைப்படத்தில், முஸ்லிம்கள் தேச பக்திக்கு விரோதமானவர்கள் என, சித்தரிக்கப்பட்டுள்ளது. எனவே, இப்படத்தை தடை செய்ய வேண்டும் என, இந்திய தேசிய முஸ்லிம் லீக் கூறியுள்ளது. இதுகுறித்து, அக்கட்சியின் மாநில தலைவர் ஜவஹர் அலி வெளியிட்டுள்ள அறிக்கை: மும்பைக் குண்டு வெடிப்புச் சம்பவத்தை மையப்படுத்தி, துப்பாக்கி திரைப்படம் எடுக்கப்பட்டுள்ளது. மும்பை சம்பவத்தில் சில தீவிரவாத இயக்கங்களின் தொடர்பு இருந்தாலும், முஸ்லிம்களுக்கும், அதற்கும் தொடர்பில்லை. இந்தியாவில் வாழும் முஸ்லிம்களுக்கு, தாய் நாடு இந்தியா தான்.

தாய்நாட்டுக்கு எதிராகச் செயற்படுபவன் உண்மையான முஸ்லிமாக இருக்க முடியாது. துப்பாக்கி படத்தில், முஸ்லிம்களை தீவிரவாதியாக சித்தரித்துள்ளனர். யாரோ சிலர் செய்யும் தவறுகளுக்கு, ஒட்டுமொத்த முஸ்லிம்களும் பொறுப்பேற்க முடியாது. எனவே, துப்பாக்கி படத்தை தமிழக அரசு தடை செய்ய வேண்டும். இவ்வாறு, ஜவஹர் அலி கூறியுள்ளார். இதற்கிடையே, தடைசெய்ய வலியுறுத்தி, நீதிமன்றத்தில் வழக்கு தொடரவும், முஸ்லிம் லீக் கட்சியினர் திட்டமிட்டுள்ளனர்.

# பாரதிய ஜனதாக் கட்சியில் இணைந்தார் நடிகை நமீதா




தென்னிந்திய மொழிபட நடிகை நமீதா பாரதிய ஜனதா கட்சியில் இணைந்ததாகத் தகவல் வெளியாகியுள்ளது. நடிகை நமீதா காங்கிரஸில் இணையப் போவதாக செய்திகள் வலம் வந்தாலும் தற்போது அவர் பா.ஜ.க.வில் இணைந்துள்ளதாகப் கூறப்படுகிறது.

இதையடுத்து எதிர் வரும் 2014 நாடாளுமன்ற தேர்தலில் அவர் பா.ஜ.க.வுக்காக தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. குஜராத்தை சொந்த மாநிலமாக கொண்ட நமீதா, தென்னிந்திய மொழிப் படங்களில் பரபரப்பாக நடித்தவர்.

தற்போது சற்றுபட வாய்ப்புகள் குறைந்துள்ள நிலையில் வேறு தொழில்களில் (ரியல் எஸ்டேட், இலத்திரனியல் ஷோ ஷரூம்) ஈடுபட்டு வருகிறார். ஆனால் பா.ஜ.க. பொதுச்செயலாளர் வானதி சீனிவாசன் கூறுகையில், நமீதா பா.ஜ.க.வில் சேர்ந்தது உறுதியாகவில்லை. இது பற்றி நான் ஏதும் கூற விரும்பவில்லை என்றார்.

# Doodle 4 Google போட்டியில் இந்திய மாணவன் வெற்றி



புகழ்மிக்க தேடுபொறி தளமான Google நடத்திய Doodle 4 Google போட்டியில் 9ஆம் வகுப்பு பயிலும் அருண் குமார் யாதவ் வெற்றி பெற்றுள்ளார்.

சண்டிகார் மாநிலத்தை சேர்ந்த அருண் குமார் யாதவ் வடிவமைத்த டூடுளே தேசிய குழந்தைகள் தினமான இன்று, கூகுள் முகப்பில் தெரிகிறது.

இந்தியா முழுவதும் கூகுள் நடத்திய Doodle 4 Google போட்டி வேற்றுமையில் ஒற்றுமை எனும் தலைப்பின் கீழ் நடைபெற்றது.

இதில் 60 நகரங்களைச் சேர்ந்த 2,00,000 சிறுவர்கள், சிறுமிகள் கலந்து கொண்டு தங்களது டூடுளை அனுப்பி வைத்தனர்.

இந்நிலையில் டெல்லியில் உள்ள ரயில் அருங்காட்சியகத்தில் திங்கட்கிழமை வெற்றியாளர்கள் அறிவிக்கப்பட்டனர்.

கால்பந்து வீரர், கதகளி நடனக் கலைஞர், மயில், விவசாயி மற்றும் பூக்களைக் கொண்டு கவரும் வண்ணம் கூகுள் டூடுளை வடிமைத்த அருண்குமாரின் டூடுள் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் போட்டியில் வாசுதேவன் தீபக், பெங்களூரைச் சேர்ந்த ஷர்வயா மற்றும் விசாகப்பட்டினத்தைச் சேர்ந்த ப்ரீத்தம் பால் ஆகிய மூன்று மாணவர்களும் வெற்றியாளர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

# இந்திய செய்திகள்

## ஜனநாயகம் மலர காந்திய வழியைப் பின்பற்றினேன்

### ஆங் சான் சூசி



இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மியான்மர் எதிர்க்கட்சித் தலைவர் ஆங்சான் சூகி டெல்லியில் நடந்த கருத்தரங்கம் ஒன்றில் கலந்து கொண்டார்.

பின்னர் அவர் பேசியதாவது: எனது அறவழிப் போராட்டத்திற்குத் தூண்டுதாலாக இருந்தவர் மகாத்மா காந்தி தான்.

எனது நாட்டில் ஜனநாயகம் மலர நான் நடத்திய இயக்கத்திற்கு காந்திய வழியைத்தான் பின்பற்றினேன் என்றார்.

பின்னர் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி பேசுகையில், மியான்மரில் ஜனநாயகம் தழைக்க சூகியின் போர்ராட்டம் பாராட்டுதலுக்குரியது என்றார்.



குழந்தைகள் தின விழாவையொட்டி, கிருஷ்ணகிரி புனித அன்னாள் ஆங்கிலப் பள்ளியில், மாணவ, மாணவியர்கள் பல்வேறு தலைவர்களின் வேடமணிந்து பங்கேற்றனர்.

## இந்தியக் குழந்தைகளுக்கு வாழ்த்துக்கள் தெரிவித்தார் சுனிதா



சர்வதேச விண்வெளி ஆய்வகத்திலிருந்து இந்திய வம்சாவளி விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் குழந்தைகள் தின வாழ்த்துக்கள் தெரிவித்தார். கடந்த 100 நாட்களுக்கும் மேலாக சர்வதேச விண்வெளி ஆய்வகத்தில் இந்திய வம்சாவளி அமெரிக்கா வாழ் விண்வெளி வீராங்கனையான சுனிதா வில்லியம்ஸ் ஆய்வுகள் மேற்கொண்டுள்ளார்.

இந்நிலையில் நாசாவின் ஒப்புதல் பெற்று குஜராத்தில் இயங்கி வரும் குஜராத் சயின்ஸ் சிட்டியின் மூத்த அறிவியல் அறிஞர் நரோத்தம் சாஹு, சுனிதா வில்லியம்சுடன் நடத்திய உரையாடலில், குழந்தைகள் தின வாழ்த்தை சுனிதா தெரிவித்துக் கொண்டார். இதற்கு முன்பு, தீபாவளி வாழ்த்தையும் சுனிதா தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## டுபாயில் இந்தியருக்கு 5,00,000 அமெரிக்க டொலர் மதிப்புள்ள விருது

மும்பை புறநகர் பகுதியில் குழந்தைகளுக்கு குறைந்த செலவில் கல்வி கற்பித்ததற்காக இந்தியருக்கு 5,00,000 அமெரிக்க டொலர் மதிப்புள்ள விருது வழங்கப்பட்டுள்ளது.

துபாயில் நடந்த உலகக் கல்விக்கான புதிய கண்டுபிடிப்பு மாநாட்டில் 100க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து 1200 பேர் கலந்து கொண்டனர்.

இதில் மும்பை புறநகர் பகுதியில் குழந்தைகளுக்கு குறைந்த செலவில் கல்வி கற்பித்ததற்காக மாதவ் சவான் என்ற முன்னாள் வேதியியல் பேராசிரியர் இந்த விருதை பெற்றுக்கொண்டார்.


விருது பெற்ற பின்னர் சவான் கூறுகையில், கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்னர் எனது நாட்டில் நூற்றுக்கணக்கான குழந்தைகளின் வாழ்வில் மாறுதல் தேவை என்பதை உணர்ந்தேன்.

பல தனிநபர்களும், அமைப்புகளும் பல நலத்திட்டங்களை செய்து வருகின்றனர்.

# சண்டிலிப்பாய் கோட்டம்: கால்பந்தாட்டப் போட்டி

யாழ். சண்டிலிப்பாய் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கால்பந்தாட்டப் போட்டியின் இறுதிப்போட்டியில் 14 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் சென். ஜோசப் மகாவித்தியாலயமும் 16 மற்றும் 18 வயதுப் பிரிவினர்களுக்கான போட்டிகளில் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் வெற்றி பெற்றன.

சண்டிலிப்பாய் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கால்பந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டி மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் புதன்கிழமை நடைபெற்றது.





14 வயதுப் பிரிவினருக்கான இறுதிப்போட்டியில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரியை எதிர்த்து மாதகல் சென்.ஜோசப் மகாவித்தியாலயம் மோதியது. தொடக்கம் முதல் ஆதிக்கம் செலுத்திய மாதகல் சென். ஜோசப் மகாவித்தியாலயம் முதல் பாதி ஆட்டத்தில் ஒரு கோலைப் போட்டது. இரண்டாவது பாதி ஆட்டத்திலும் அவ்வணி ஒரு கோலைப் போட்டது. இறுதியில் சென். ஜோசப் மகாவித்தியாலயம் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

16 வயதுப் பிரிவினருக்கான இறுதிப்போட்டியில் மாதகல் சென். ஜோசப் மகாவித்தியாலயத்தை எதிர்த்து மானிப்பாய் இந்துக் கல்லூரி மோதியது. முதல் பாதி ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி 2 கோல்களை போட்டது. இரண்டாவது பாதி ஆட்டத்தில் மேலும் ஒரு கோலை மானிப்பாய் இந்துக் கல்லூரி போட்டது. இறுதியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

18 வயதுப் பிரிவினருக்கான இறுதிப்போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியை எதிர்த்து இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மோதியது. முதல் பாதி ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அடுத்தடுத்து 2 கோல்களைப் போட்டது. இந்நிலையில் பதிலுக்கு ஒரு கோலைப் போட்ட ஹென்றியரசர் ஆட்டத்தில் விறுவிறுப்பை ஏற்படுத்தியது. இரண்டாவது பாதி ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி ஒரு கோலைப் போட்டது.

சிறிது நேரத்தில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரியும் ஒரு கோலைப் போட்டது. இருந்தும் மீண்டும் ஒரு கோலைப் போட்ட மானிப்பாய் இந்துக் கல்லூரி வெற்றியை உறுதிசெய்தது. இறுதியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி 4:2 என்றகோல் கணக்கில் வெற்றிபெற்றது.

# பாஷையூர் றோ.க.த.க.பாடசாலையில் வலைபந்தாட்டத் திடல் திறந்துவைப்பு

யாழ். இராணுவப் படைத்தலைமையகத்தின் நிதிப்பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்ட பாஷையூர் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் வித்தியாலயத்தின் வலைப் பந்தாட்டத்திடல் திறப்பு விழா இன்று வியாழக்கிழமை. நடைபெற்றது.


இந்நிகழ்வில் 51ஆவது படைப் பிரிவின் கட்டளைத் தளபதி சந்தன குணவர்த்தன பிரதம விருந்தினராக கலந்துகொண்டு வலை பந்தாட்டத் திடலை திறந்துவைத்தார்.



# ஒவ்வொரு வீரர், வீராங்கனைகளும் ஊக்குவிக்கபட வேண்டும்

- பாட்மின்டன் வீராங்கனை ஜுவாலா கூறுகிறார்

லண்டனில் நடந்த 30வது ஒலிம்பிக், பேட்மின்டன் போட்டியில் இந்தியாவின் சாய்னா நெஹ்வால், வெண்கலப் பதக்கம் வென்றார். இதையடுத்து சாய்னாவின் மீது மட்டும் அதிக கவனம் செலுத்துவது தவறு என்று சக பாட்மின்டன் வீராங்னை ஜுவாலா கட்டா கூறினார்.



இது குறித்து அவர் கூறுகையில், பேட்மின்டன் போட்டிகளில் இரட்டையர் பிரிவிலும் வீரர், வீராங்கனைகள் சிறப்பாக செயல்படுகின்றனர்.

ஆனால் ஒலிம்பிக் பதக்கம் வென்ற காரணத்தினால் சாய்னா மீது தனி அக்கறை காட்டுவது சிறந்தது இல்லை. இந்தியாவில் சாய்னா மட்டுமே சிறந்த வீராங்கனை என்று அர்த்தம் கிடையாது.

போட்டியில் பங்கேற்கும் ஒவ்வொரு வீரர், வீராங்கனைகளையும் ஊக்குவிப்பது அவசியம். ஆனால், இது தற்போது நடப்பதாக தெரியவில்லை.

இந்நிலை இப்படியே தொடர்ந்தால் வருங்காலத்தில் பேட்மின்டன் போட்டியில் இந்தியா சாதிப்பது கடினமாகும் என்றும் குறிப்பாக இரட்டையர் பிரிவில் பங்கேற்ற வீரர்கள் மத்தியில் ஆர்வம் குறைந்துவிடும் எனவும் கூறியுள்ளார்.

# பாகிஸ்தானிய ரசிகர்களுக்கு இலகுவான வீசா வேண்டும்

- முன்னாள் கிரிக்கட் வீரர்கள்

இந்தியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள பாகிஸ்தான் அணிக்கும், இந்திய அணிக்குமிடையிலான கிரிக்கெட் போட்டிகளைப் பார்வையிட இந்தியாவிற்கு விஜயம் செய்யவுள்ள பாகிஸ்தானைச் சேர்ந்த ரசிகர்களுக்கு இலகுவான வீசா நடைமுறை பின்பற்றப்பட வேண்டும் என பாகிஸ்தானின் முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாகிஸ்தானின் முன்னாள் தலைவரும், பாகிஸ்தான் சார்பாக அதிக போட்டிகளில் பங்குபற்றியவருமான இன்ஸமாம் உல் ஹக் இதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கையில், இந்தியாவிற்குப் பயணம் செய்ய விரும்பும் ரசிகர்களுக்கு இலகுவான வீசா நடைமுறையை இந்திய அரசு பின்பற்ற வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார்.இந்தியா பின்பற்ற வுள்ள பாதுகாப்பு நடைமுறைகளில் தளர்வு ஏற்படாத அதேவேளை பாகிஸ் தானிய ரசிகர்களுக்கு இலகு வான முறையைப் பின்பற்றக் கூடியதுமான திட்டமொன்றை வகுக்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.




# உலக செஸ்: ஹரிகா வெற்றி

உலக செஸ் சாம்பியன்ஷிப் தொடரின், இரண்டாவது சுற்று போட்டியில் இந்தியாவின் துரோணவள்ளி ஹரிகா வெற்றி பெற்றார்.

ரஷ்யாவின் ஹண்டி மன்சிஸ்க் நகரில், உலகின் முன்னணி வீராங் கனைகள் பங்கேற்கும் செஸ் சாம்பியனீப் தொடர், "நாக் அவுட் முறையில் நடக்கிறது. இதன் இரண்டாவது சுற்று முதல் போட்டியில், இந்தியாவின் ஹரிகா, ஆர்மீனியாவின் எலினாவை சந்தித்தார். இதில் இதில் வெள்ளை காய்களுடன் விளையாடிய ஹரிகா, 33வது நகர்த்தலில் வெற்றி பெற்றார்.



தர வரிசையில் 2 வது இடத்திலுள்ள ஹம்பி, இரண்டாவது சுற்று முதல் போட்டியில், உக்ரைனின் ஜுகோவாவிடம் தோல்வியடைந்தார்.

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 16.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது